Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (28-11-66) இதழ் 288
பராபவ ஷஃபான் 14 கார்த்திகை 13 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## சிக்கனம்

கொழும்பு, ஞாயிறு
பல்கலைக்கழகச் செலவினங்களுக்கு ஒருகோடியே எண்பது லட்சம் ரூபாதான் ஒதுக்கப்பட்டிருப்பதால் பல்கலைக்கழகச் சீரமைப்பு வேலைகளை இத்தொகைக்குள் அடங்கக்கூடிய முறையில் மேற்கொள்ள வேண்டுமென்று தேசியக் கல்விச் சபைத்தலைவர் டாக்டர் ஜி பி மலலசேகரா தெரிவித்திருக்கிறார்.

# சுதந்திரக்கட்சியுடன் ஒற்றுமை முயற்சி

## 2 லட்சம் தொன் அரிசி தர சீனா சம்மதம்

கொழும்பு, திங்கள்
இலங்கைக்கு சீனா 2 லட்சம் தொன் அரிசியை அனுப்ப சம்மதித்துள்ளது. அதேநேரத்தில் 48 ஆயிரம் தொன் ரப்பரை இலங்கையிடமிருந்து அது வாங்கும்.

இதற்கான ஒப்பந்தமொன்று 29-ம் திகதி கைச்சாத்தாகவிருக்கிறது.

இதுசம்பந்தமாக சீன வெளிவர்த்தக மந்திரி திரு. லின் ஹெயின் தலைமையிலமைந்த சீன வர்த்தகக் கோஷ்டிக்கும் வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. பி பீரிஸ் தலைமையில் அமைந்த இலங்கை வர்த்தகக் கோஷ்டிக்குமிடையில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இவ்விதம் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

## பூமியை நோக்கி வரும் ஆகாயக் கல்

திருநெல்வேலி, திங்கள்
நாற்பது லட்சம் மைல்கள் உயரத்திற்கும் அப்பாலிருந்து பூமியை நோக்கி ஆகாயக் கல் ஒன்று வந்துகொண்டிருக்கின்றதாம். இந்த அதிசயக் கல் அனேகமாக அடுத்த வருடம் ஜூன் மாதம் 8-ந் திகதி பூமியில் வந்து விழும் என கணக்கிடப்பட்டுள்ளது. இக்கல் விழும் இடம் மக்கள் வசிக்கும் பகுதியாக இருந்தால் அப்பகுதியில் பெரும் நாசம் விளையும் என்றும் அது கடலில் விழுமானால் எந்த அபாயமும் ஏற்படாதெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தகவலை "சயன்ஸ் டைஜஸ்ட்" என்ற அமெரிக்க விஞ்ஞான சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

## சிறிமா இரியகொல்ல ஹொரகொல்லையில் சந்திப்பு

கொழும்பு, ஞாயிறு
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்த்து அரசாங்கத்தை ஸ்திரப்படுத்துவதற்கான முயற்சிகள் மிகத் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தேசிய அரசாங்க கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல சென்ற வாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவை ஹொரகொல்லையில் சந்தித்து நீண்ட நேரம் பேசினார்.

தமது ஹொரகொல்லைச் சந்திப்பு பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்குத் தெரியுமென்று திரு. இரியகொல்லை திருமதி சிறிமாவிடம் கூறியதாக அறியப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள வலதுசாரி அங்கத்தவர்களையும், எம். பிக்களையும், பிரமுகர்களையும்கூட திரு. இரியகொல்லை சென்ற வாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவந்துள்ளார்.

தேசிய அரசாங்கமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்கவேண்டிய அவசியம் பற்றிப் பல்வேறு அம்சங்களை திருமதி சிறிமா பண்டாரநாயகாவிடமும் சுதந்திரக்கட்சியின் இதர முக்கியஸ்தர்களிடமும் திரு. இரியகொல்லை விளக்கிக் கூறியதாகத் தெரியவருகிறது.

திரு. இரியகொல்லை தவிர இந்த 'இணைப்பு' முயற்சியில் செனட்டர் ஒருவரும் தீவிரமாக முயற்சி செய்துவருவதாகத் தெரிகிறது. பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவை திருமதி சிறிமா பண்டாரநாயகா விரைவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று திரு. இரியகொல்லை பெரும் முயற்சி செய்வதாகவும் அறியப்படுகிறது.

## வெளிநாட்டு உதவிபெற ஸ்திரமான அரசாங்கம்

இலங்கையின் அபிவிருத்திக்கு உதவி வழங்க வெளிநாடுகள் பல முன்வந்திருக்கின்றன. ஆயினும் இலங்கையில் ஒரு ஸ்திரமான அரசாங்கம் அமையாதவரை மட்டுமல்ல ஸ்திரமான அரசியல் நிலை ஏற்படும் வரை உதவியளிக்க அவை தயங்குகின்றன. இதனால் அரசியலில் ஸ்திரமான நிலையை ஏற்படுத்தும் பொருட்டு முக்கிய அரசியல் கட்சிகளான யு. என். பி.க்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி அரசியலிலும், ஆட்சியிலும் ஸ்திரமான நிலையை உருவாக்க முயற்சி செய்யப்படுகிறதாகக் கூறப்படுகிறது. இதில் அரசாங்கக்கட்சியைச் சேர்ந்தவர்களே முன்னணியில் நின்று முயற்சி செய்கின்றனராம்.

## பொதுக் கூட்டத்தில் இரியகொல்ல அழைப்பு

அத்தனகல்லத் தொகுதியில் நடந்த ஒரு வைபவத்தின் பின் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் அமர்ந்திருந்த மேடையில் நின்று திரு இரியகொல்ல பேசுகையில் "எங்கள் வேறுபாடுகளை மறந்து நாட்டின் நலனுக்காக ஒன்று சேர்ந்து உழைப்போம்" என்று விடுத்த அழைப்பு திருமதி சிறிமாவுக்கு மறைமுகமாக விடுத்த அழைப்பாகவே கருதப்படுகிறது.

"எங்களுக்குள் உள்ள சிறிய வேற்றுமைகளை அரசியல் கருத்து வேற்றுமைகளை, பொறாமை, பொச்சரிப்புக்களை விடுத்து, எங்களுக்குள் உள்ள கோஷ்டி மனப்பான்மைகளை நீக்கி

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமதி சிறிமாவின் பிடிகொடுக்காத பேச்சு

திரு. இரியகொல்லை பேசியபின் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பேசினார். ஆயினும் 'வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுவோம்' என திரு. இரியகொல்ல விடுத்த அழைப்பு பற்றி திருமதி சிறிமா எதுவும் குறிப்பிட்டுப் பேசவில்லை. அவர் 'பிடிகொடாமல்' பேசினார்.

கல்வி அமைச்சர் என்ற முறையில் திரு. இரியகொல்ல அத்தனகல்லத் தொகுதிக்கு முதல் தடவையாக வந்துள்ளபோது அவரை வரவேற்பதில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் எம். ஈ. பி. அரசாங்கம் அமைக்கப்பட்டபொழுது அதில் திரு. இரியகொல்லை முன்னின்று உழைத்தாரென்றும் திருமதி சிறிமா கூறினார். நாட்டில் ஒழுக்கம் குறைந்து வருவது மனவருத்தத்துக்கு பீதியளிப்பதாகக் குறிப்பிட்டு, ஒழுக்கம்பற்றி திருமதி சிறிமா பேசினார். திரு. இரியகொல்லவின் ஒற்றுமை அழைப்புக்கு அவர் பதில் சொல்லவில்லை.

## புயல் பற்றிய எச்சரிக்கை

### இன்று வடபகுதியில் கடும் மழை பெய்யலாம்

கொழும்பு, ஞாயிறு
யாழ்ப்பாணத்திற்கு கிழக்கே சுமார் 400 மைல் தொலைவில் காற்றழுத்த மண்டலம் ஒன்று உருவாகியிருப்பதாகவும் அது இப்போது மேற்குத் திசை நோக்கி விரைவதாகவும் கொழும்பு அவதானநிலையம் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலின்படி நாளை (திங்கள்) வடக்கு கிழக்கு மாகாணங்களில் பலத்த காற்றும் மழையும் இருக்கும் என்று கருதப்படுகின்றது.

வடக்குக் கிழக்கில் உள்ள கரையோரப்பகுதி மக்கள் மோசமான காலநிலை குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளார்கள். மீனவர்கள் இன்று மாலை 6 மணிமுதல் அடுத்த அறிவித்தல்வரை கடலில் செல்ல அனுமதிக்கவேண்டாமென கரையோரப்பகுதி பொலிஸ்நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**மாவிட்டபுரம்**

இன்று மாவிட்டபுரம் பொலிஸ்நிலையத்துக்கு கொழும்பில் இருந்து கிடைத்த ஒரு எச்சரிக்கைச் செய்தியின்படி, வடக்கு, கிழக்கு கரையோரப்பகுதிகளில் கடல்கொந்தளிப்பும் பலத்த காற்றும் இருக்கும் என்று. அறிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில்**

சென்னை அவதானநிலையம் இன்று விடுத்த ஒரு எச்சரிக்கையில் நாளை சென்னை ராஜ்யத்தை புயல் தாக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடலூருக்கு 450 மைல் தொலைவில் வங்காளக்குடாவில் உருவான காற்றழுத்த மண்டலம் தமிழ்நாட்டை நோக்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

## யாழ். மாநகரசபை 'பட்ஜட்'

திருநெல்வேலி, திங்கள்
யாழ்ப்பாணம் மாநகர சபையின் 1967-ம் ஆண்டுக்கான புதிய பட்ஜட், பரிசிலனையின் பின்னர் உள்ளூராட்சிக் கமிஷனரின் அங்கீகாரத்துக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த பட்ஜட் அடுத்த மாதம் 2-ந் திகதியிலிருந்து ஒரு வார காலத்துக்கு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படுமென்றும் மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### திருமண அழைப்பு

எமது சிரேஷ்ட புதல்வன் செல்வன் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் மல்லாகம் நா. சின்னத்தம்பி ஆச்சாரி அவர்களின் புதல்வி செல்விதங்கம்மா அவர்களுக்கும் 28-11-66 திங்கட்கிழமை நண்பகல் 12 முதல் 1-30 மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். க. தம்பு ஆச்சாரியும் பாரியாரும். "நித்தியானந்த பவனம்", மூனாய்றோட், வட்டுக்கோட்டை. 1177

### திருமண அழைப்பு

கிருஷ்ணராசா - ஞானசவுந்தரி

எமது மகன் செல்வன் கிருஷ்ணராசாவுக்கும் (C.W.E. கொழும்பு 2) நீர்வேலி வடக்கு திரு. இலங்கைநாதர் மகள் செல்வி ஞானசவுந்தரிக்கும் இன்றிரவு 9 மணிக்கு வரும் சுபவேளையில் திருமணம் மணமகளின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம், நண்பர்கள் சுற்றத்தார்களனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ஆறுமுகம் பெத்தினமும், பாரியாரும், நல்லூர், 28-11-66. 1178


## மந்திரியின் கருத்துக்கு எதிர்ப்பு

உடுவில், சனி

உடுவில் கிராம சபையின் 23-ம், 24-ம் வட்டாரங்களை சுன்னாகம் பட்டினசபையின் 5-ம் வட்டாரத்துடன் இணைப்பது என்ற உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்தின் கருத்திற்கு, புரட்சிவாத லங்கா சமசமாசக்கட்சி வாலிப முன்னணி (சுன்னாகம் கிளை)யினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

புரட்சிவாத லங்கா சமசமாச சுன்னாகக் கிளையின் வாலிபமுன்னணி, எங்கள் நிர்ணயிப்புத் தலைவர் திரு. க. தங்கநாதன், சுன்னாகம்பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், "தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற அடிப்படையில் வட்டார நிர்ணயம் செய்வதை தமது கட்சி எதிர்ப்பதாகவும், எல்லா மக்களுக்கும் சமவாக்கு அடங்கிய வட்டாரமாகப் பிரிக்கப்பட வேண்டும்" என்றும் குறிப்பிடுகின்றது.


**யாதவா** (மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
M.R.ராதா - M.N.ராஜம் நடித்த
**ரத்தக்கண்ணீர்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி நடித்த
**பாசம்**


**நியூ காலிங்கன்** (இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி நடித்த
**வேட்டைக்காரன்**

**மகாத்மா தியேட்டர்**
தெல்லிப்பழை, கரவெட்டி
பி. ப. 4 மணி மட்டும்
Elizabeth Taylor
Richard Burton
in
THE SANDPIPER
(M. G. M's) (Color-scope)
(Adults)

REGAL — JAFFNA
NOW SOWING
DON NEGOWAN &
SILVANA PAMPANINI
in
Guns of the Black Witch

**2வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) — மொடேர்ண் (பதுளை) — விஜிதா (ஹட்டன்)



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
# ஆண்டவன் கட்டளை
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்


## சேக்கிழார் ஆய்வேடு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் சேக்கிழார் ஆய்வேடு படிக்கும் தொடரில், ஆசிரியர் க. சி. குலரத்தினம் 'சேக்கிழாருக்குப் பின் வந்த அடியார்கள்' என்னும் பொருள் பற்றி நாளை (29-11-66) மாலை 5-30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் ஆய்வேடு படிப்பார்.

## இந்திய திரைப்பட பிரதிநிதிகள் வருவர்

கொழும்பு, ஞாயிறு

இந்திய திரைப்பட இசைத்தட்டுக்களை இலங்கை வானொலியில் ஒலிபரப்பியது சம்பந்தமாகச் செலுத்தப்படவேண்டிய பணம் சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்னைகளை ஆராய்ந்து தீர்வுகாணும் முகமாக இந்திய திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள 5 அங்கத்தவர்கள் அடுத்த வாரத்தில் இலங்கை வரவிருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இவர்கள் இங்கு வருகிறார்கள்.

## 'கடமையில் ஊக்கம் வேண்டும்'

யாழ்ப்பாணம், திங்

யாழ்நகர் புனிதசம்பத்திரிசியார் கல்லூரி உயர்வகுப்பு மாணவரது வருடாந்த இரவு விருந்து கல்லூரி மண்டபத்தில் மாணவர் மன்றத்தலைவர் செல்வன் ஈ. ஜே. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் ஏ. கபிரியேல் இவ்வைபவத்தின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

விருந்தின் பின்னர் கல்லூரி சார்பில் டாக்டர் சிவஜோதி உரை நிகழ்த்துகையில் ஐரோப்பிய கன்னியாஸ்திரிகள் இலங்கையில் வைத்தியசாலையில் செய்துள்ள அளப்பரிய சேவையைப் பாராட்டினார். அவர் மேலும் பேசுகையில் தேசியகல்வியில் தனித்தியங்கும் பாடசாலைகளின் பணிகளைக் குறிப்பிட்டு அவற்றின் தன்னலமற்ற சேவையின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

டாக்டர் கபிரியல் பேசுகையில் 'ஒவ்வொரு வாலிபனும் காலத்தின் முக்கியத்துவத்தையும் நேரத்தின் பெறுமதியையும் உணர்ந்து கடமையில் ஊக்கம், தொண்டு தனது எதிர்காலத்தை வளப்படுத்துவது அவசியம்' என்றார்.


## வானொலி கொழும்பு

**திங்கள் 28 - 11 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை 7-15 இசைப்பாடல்கள், 7-30 குரல் வகை, 7-45 திரை இசை, 8-15 இலவாயிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 இராமசஞ்சிகை, 6-45 குரல்வகை, 7-15 நிலைய ஒலிப்பதிவுகள், 7-30 கலைக்கோலம் — பல்கலை மதிப்பீடு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 [illegible] இன்னிசை, 9-45 அமுதகீதங்கள், 10-15 நேயர் விருப்பம்.


சென்னை

## முன்னாள் மேயர் போட்டியிட ஆர்வம்

விழுப்புரம், நவ. 27

சென்னை மாநகரசபை முன்னாள் மேயர் சிட்டிபாபு டெல்லி சட்டசபைக்குப் போட்டியிடப் போவதாகவும், அதற்கு திண்டிவனம் தொகுதியில் போட்டியிடுவதற்கு அனுமதி தரும்படியும் தி. மு. க. தேர்தல்குழுவிடம் மனுச்செய்திருக்கிறார்.

## சைதாப்பேட்டையில் கருணாநிதி போட்டி

சென்னை, நவ. 27

திரு மு. கருணாநிதி சென்னை சைதாப்பேட்டைத் தொகுதியில் போட்டியிடுவாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தியாகராய நகர் தொகுதியின் தற்போதைய சட்ட சபை உறுப்பினரும் இந்தத்தொகுதியில் போட்டியிட மனுச்செய்துள்ளார். எனினும் கருணாநிதி தான் தி. மு. க. சார்பில் இங்கு போட்டியிடுவாரெனத் தெரியவருகிறது.

## மிளகாய் றாத்தல் 3 ரூபா

நெடுந்தீவு, ஞாயிறு

அண்மையில் ஏற்பட்ட மிளகாய் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து தற்போது நெடுந்தீவில் பலகடைகளில் ஒரு றாத்தல் மிளகாய் 3 ரூபா வரை விற்கப்படுகிறது. வியாபாரிகள் 1 ரூபா 50 சதமாக வாங்கி 3 ரூபா வரை விற்று சில வர்த்தகர்கள் கொள்ளை லாபம் பெற்றுக்கொள்வதாக அறியப்படுகிறது.

## குடியேற்றத் திட்ட காணித்தேயிலை

கொழும்பு, ஞாயிறு

குடியேற்றத் திட்டங்களின்கீழ் கொடுக்கப்பட்ட காணிகளிலுள்ள குடியிருப்பாளரின் தேயிலைத்தோட்டங்களுக்கு, அப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் மேற்பார்வையாளர்களை நியமிப்பது பற்றி காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு ஆலோசித்து வருகிறது.

பண்டாரகம

## தேர்தல் தீர்ப்புக்கு எதிராக அப்பீல்

கொழும்பு, ஞாயிறு

கடந்த வருடம் மார்ச் மாதம் ஜனப் பிரதிநிதிகள் சபைக்கு பண்டாரகம தேர்தல் தொகுதிக்குத் திரு. கே. டி. பெரேரா தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட இரு ஆட்சேப வழக்குகளில் தேர்தல் நீதிவான் அளித்த தீர்ப்பை எதிர்த்து, சுப்ரீம்கோர்ட்டில் இரு அப்பீல் ஆட்சேபமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நீதவான் திரு. ஏ. டபிள்யு. எச். அபேசுந்தரா, 5-11-66-ல் அளித்த தீர்ப்பில், திரு. கே. டி. டி. பெரேராவின் தெரிவு சரியென்றுகூறி, இரண்டு தேர்தல் ஆட்சேப மனுக்களையும் நிராகரித்திருந்தார்.


## விளம்பரம்

### கேள்விப்பத்திரம்

**தேசிய உப்புக்கூட்டுத்தாபனம் ஆனையிறவு**

ஆயிரத்துநூறு (1100) கனம் (Cube) தரமுள்ள கிறவல் (Gravel) மண் ஆனையிறவு தேசியஉப்புக் கூட்டுத்தாபனம் வரை கொண்டுவந்து பறித்துக் கியூப்கட்டிப் பாரம் கொடுப்பதற்கு 8-12-66 பகல் 12 மணிவரை இதன் கீழ்க் கையொப்பமிடுபவரால் கேள்விப்பத்திரங்கள் வரவேற்கப்படும். மேற்கொண்டு விபரங்களுக்கு பின் கூறப்படுபவருடன் தொடர்பு கொள்ளவும்:—
பிராந்திய முகாமையாளர் வடபிராந்தியம், தேசியஉப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு.

பிராந்திய முகாமையாளர்
(வடபிராந்தியம்)
தேசிய உப்புக்
கூட்டுத்தாபனம்.
ஆனையிறவு, 25-11-66.
1041


## சமூகத் தொண்டரின் மறைவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சைவத்திற்கும் தமிழிற்கும் அரும் தொண்டாற்றியவரும் வட்டுக்கோட்டையைச்சேர்ந்தவருமான திரு. க. அண்ணாமலை 83 வயதில் சிவபதமடைந்துள்ளார்.

திரு. அண்ணாமலை மலாயாவிலும், தென் ஆபிரிக்காவிலும் இலங்கையிலும் சமயசம்பந்தமான விடயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் தன்னலமற்ற அரும்பணிகளை ஆற்றியுள்ளார்.

மலேசியாவில் கிள்ளான் என்னும் ஊரிலுள்ள கந்தசுவாமி கோவிலின் ஸ்தாபகர்களிலொருவராகவும், வட்டுக்கோட்டை இந்து இளைஞர் வாலிப சங்கத்தின் போஷகராகவும் இருந்து திரு. அண்ணாமலை, சேவை புரிந்து வந்துள்ளார்.

வட்டுக்கோட்டை ஐக்கிய நாணய சங்கம், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஆகியவற்றின் அபிவிருத்திக்காகவும் அவர் அரும்பணி புரிந்து வந்துள்ளார்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கல்வி பயின்ற திரு. அண்ணாமலை கோலாலம்பூரிலுள்ள மாவட்ட மருத்துவ மனையில் கடமையாற்றி 1938-ம் ஆண்டு பதவியிலிருந்தும் இளைப்பாறினார்.

நெடுந்தீவு, ஞாயிறு

கடந்தசூறாவளியின்போது அழிந்த தென்னைமரங்களுக்குப் பதிலாக நெடுந்தீவு கிராம சேவையாளர்கள் இங்குள்ள மக்களுக்கு தென்னம்பிள்ளைகள், மா, எலுமிச்சங்கன்றுகள் ஆகியன விநியோகம் செய்துள்ளனர்.


## ஜீ. சி. ஈ. வீரமாணவர் வீர மாணவிகள் (ஓர் நவீன பிரசுரம்)

ஜீ. சி. ஈ. (உயர்தரம்/சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றவிருக்கிறீர்களா? அல்லது ஏலவே சித்தி படைந்துள்ளீர்களா? அப்படியானால், உங்களைப் பற்றிய மேற்படி பிரசுரத்தின் விபரங்களுக்கு உங்கள் விலாசம் விளக்கமாக எழுதப்பட்டு முத்திரை ஒட்டிய நீண்ட என்வலப்பு ஒன்று இன்றே அனுப்பிவையுங்கள்.

முகவரி:-
அதிபர்
ராஜ-செல்வ பிரசுரஸ்தாபனம்
உசன், மிருசுவில் (Mirusuvil. P.O)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாமில் 48 மணிநேர போர் ஓய்வு?

## வியட்காங்கியர் யோசனை பற்றி ஜோன்ஸன் பரிசீலனை

வாஷிங்டன், நவம்பர் 27

வியட்நாமில் நத்தார், புதுவருட தினங்களை முன்னிட்டு 48 மணிநேர போர் ஓய்வு ஏற்படவேண்டுமென வியட்காங்கியர் தெரிவித்துள்ள யோசனை பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் ஆலோசனை செய்துவருவதாக வெள்ளைமாளிகையிலிருந்து வெளியான செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் தென் வியட்நாம் இவ்வித போர் ஓய்வு வடவியட்நாமியருக்கு போரில் தம்மை மேலும் தயாரிப்படுத்திக்கொள்ள உதவியாகிவிடலாம் என கருத்து வெளியிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## 1967 பெப்ரவரி 13-ல் இந்திய பொதுத் தேர்தல்

புதுடில்லி, நவ. 27

இந்திய பொதுத் தேர்தல் அடுத்த வருடம் பெப்ரவரி 13-ம் திகதி அல்லது 14-ம் திகதி ஆரம்பமாகி 20-ம் திகதி அல்லது 21-ம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை தேர்தல் கமிஷனர் திரு. கே. வி. கே. சுந்தரம் லக்னோவில் தெரிவித்தார்.

### தற்கொலைகள்

லண்டன், நவ. 27

நாளொன்றுக்கு உலகில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தற்கொலைசெய்து கொள்கிறார்களென்றும் மூன்றில் ஒரு விகிதமான இளைஞர்களின் மரணம் தற்கொலையால் சம்பவிக்கிறதென்றும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## ஜோர்டான் மன்னர் பாதுகாப்பு நடவடிக்கை

### சகல கிராமங்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன

அம்மான், நவ. 27

இஸ்ரேல் ஜோர்டானைத் தாக்கியதைத் தொடர்ந்து ஜோர்டான் மன்னர் ஹுசெய்ன் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதனையொட்டி 18 வயதுக்கும் 40 வயதுக்குமுட்பட்ட சகலரும் கட்டாய ராணுவ சேவையில் சேரவேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எல்லையிலுள்ள சகல கிராம மக்களுக்கும் தற்பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜோர்டான் கிராமங்கள் மீது இஸ்ரேல் சென்ற 14ம் திகதி தாக்குதல் நடத்தியிருந்தது.

பொதுத் தேர்தல் முடிவு

## அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் ஆளுங்கட்சிகளே வெற்றிபெற்றன

லண்டன், நவ. 27

நேற்று நடைபெற்ற அவுஸ்திரேலியா, நியூசிலந்து பொதுத் தேர்தல்களில் ஆளும் கட்சிகளே வெற்றிபெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவில் 17 வருடங்களாகப் பதவியிலிருந்து வரும் ஹரல்ட் ஹோல்ட் தலைமையிலான கூட்டரசாங்கம் இம்முறை அதிகப்படியான வாக்குகளைப் பெற்று மீண்டும் பதவிக்கு வந்துள்ளது. திரு. ஹோலியோக் தலைமையிலமைந்த தேசியக் கட்சியே நியூசிலந்தில் மீண்டும் பதவிக்கு வந்துள்ளது.

இரு நாடுகளின் பொதுத் தேர்தலிலும் வியட்நாம் பிரச்னையே முக்கிய இடம் பெற்றது.

## மனவளர்ச்சியற்ற குழந்தைகளுக்கு புதுவாழ்வளிக்கவேண்டும்

### இந்திரா வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 27

'மன வளர்ச்சியற்ற குழந்தைகளின் மேம்பாட்டுக்காக அவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக பொது நிலையங்கள் நன்கு உதவவேண்டும்' என பிரதமர் திருமதி இந்திரா தெரிவித்துள்ளார்.

மனவளர்ச்சியற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வளிப்பது சம்பந்தமாக நடைபெற்ற அகில பாரத மகாநாடொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லதொரு எதிர்காலம் நாட்டுக்கு கிடைக்கவேண்டுமானால் குழந்தைகள் சிறப்பான வாழ்வு வாழ்வதற்கான சகல நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டுமென்றும் குழந்தைகள் ஒரு நாட்டின் பெரியசொத்தென்றும் அவர் மேலும்குறிப்பிட்டார்.

இம்மகாநாட்டில் பேசிய டாக்டர் குப்புசாமி, குழந்தைகள் மனவளர்ச்சிபெறக் கூடிய பாடசாலைகள் கிராமங்கள் தோறும் உருவாக வேண்டும் எனக்கூறினர்.

### போப்பாண்டவருக்கு வேண்டுகோள்

நியூயோர்க், நவ. 27

குடும்பக்கட்டுப்பாடு பற்றி கத்தோலிக்க திருச்சபை கொண்டிருக்கும் தீர்மானத்தை மாற்றுமாறு பாப்பாண்டவர்போலை 85 சமய, விஞ்ஞான தலைவர்கள் வேண்டியுள்ளனர். இவர்களில் 21 நோபல் பரிசு பெற்றவர்களும் அடங்கியுள்ளனர்.

குடும்பக்கட்டுப்பாட்டு திட்டம் அமுல் நடத்தப்படாவிட்டால் எதிர்கால சந்ததியினர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கர்ப்பத்தடைக்கு வாசனைத் திரவியம்

கேம்பிரிஜ், நவ. 27

ஒரு பெண் தனது காதுக்குப்பின்னால் தடவும் பிரெஞ்சு வாசனை திரவியம், கர்ப்பத்தடைச் சாதனமாக விளங்கலாமென ஓர் உடலியல் விஞ்ஞானி இங்கு தெரிவித்துள்ளார்.

வாசனை திரவியங்கள் 50 சத விதத்துக்கும் அதிகமாக விற்பனையாகும் கிறிஸ்துமஸ் காலங்களில், கடுவுறுதல் வருடத்தின் மிகக்குறைந்த விகிதத்தை அடைகிறது.

கர்ப்பத்தடை வாசனை திரவியம் கிடைக்கக் கூடிய வழிவகைகளை லண்டன் பல்கலைக்கழக உடலியல் விஞ்ஞானி பேராசிரியர் அலன் பார்க்ஸ் ஆராய்ந்து வருகிறார்.

கர்ப்பத்தடை வாசனை திரவியத்தின் வாசனைத் தன்மை இன்னும் சரியாக எது என்று கண்டு பிடிக்கவில்லை என்று அவர் தாம் எழுதியுள்ள புதிய நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"உயர்தர வாசனை திரவியங்களில் மிருகங்களின் உடற்கூறுகள் சேர்க்கப்படுகின்றன.

இந்த வாசனைகள், கர்ப்பம் தரிப்பதற்கு உதவா. பெண்கள், பெண் எலிகளைப்போல், தமக்குப் பிடிக்காத வாசனைகள் மத்தியில் கர்ப்பந் தரிப்பதற்கு எதிராக இயங்கக்கூடும்' இவ்வாறு பேராசிரியர் பார்க்ஸ் கூறுகிறார்.

(பி. டி. ஸி.)

### கார்-லொறி விபத்து

இமையாணன், ஞாயிறு

உடுப்பிட்டி சந்தியில் நேற்று மாலை நாலரை மணியளவில் ஒரு பயங்கர விபத்து நடைபெற்றது. மேற்கிலிருந்து வந்த ஒரு லாரியும் வடக்குப் பக்கத்திலிருந்து வந்து மேற்குப் பக்கம் நோக்கித் திரும்பிய ஒரு காரும் மோதிய ஒரு பெரிய பயங்கர விபத்துக்குள்ளாகியது. இவ்விபத்திலிருந்து கார்ச் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார். இவ்விபத்துக்குள்ளான லாரி பருத்தித்துறையைச் சேர்ந்தது என்றும், கார் உடுப்பிட்டியைச் சேர்ந்தது என்றும் தெரிய வருகிறது. பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 'பூரி சங்கராச்சாரியாரை விடுதலை செய்க'

### கயனா இந்து தலைவர்கள் ஜனாதிபதிக்கு தந்தி

ஜோர்ஜ்டவுன், நவ. 27

பூரிசங்கராச்சாரியாரை மறியல் செய்ததை ஆட்சேபித்து அவரை உடனடியாக விடுதலை செய்யும்படி கோரி கயனாவின் இந்துத் தலைவர்கள் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்குத்தந்தி அனுப்பியுள்ளார்கள்.

புனித பசுக்களைக் கொல்வதை எதிர்த்து பசுவதைத் தடைச் சட்டம் வேண்டுமென ஜகத்குரு ஆரம்பித்த உண்ணாவிரதத்தின் மூன்றாம் நாளாகிய சென்ற செவ்வாயன்று அவர்கைது செய்யப்பட்டார்.

கயனாவின் பண்டிதர் சபையினால் அனுப்பப்பட்ட தந்தியில் இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கையால் தாம் அதிர்ச்சியுற்றிருப்பதாகக் கூறியுள்ளனர்.

"இந்த விஷயம் ஜகத்குருவுடன் ஆலோசிக்கப்பட்டு அவரது ஒத்துழைப்பைப் பெற்றிருக்கலாமென எமது சபை கருதுகிறது" என்அத் தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(பி. டி. ஸி.)

## கடல் அலையால் இயங்கும் மின்சார நிலையம்

### பிரான்சில் ஆரம்பிக்கப்பட்டது

பாரிஸ், நவ. 27

கடல் அலையால் இயங்கும் மின்சார நிலையம் ஒன்றை பிரான்ஸின் ஜனாதிபதி டீகால் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

கடல் அலையால் இயங்கும் முதல் மின்சார நிலையமான இது பிரிட்டானி என்ற இடத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

### வறட்சிப் பிரதேசங்களுக்கு உதவ நடவடிக்கை

புதுடில்லி, நவ. 27

வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு உதவுவதற்காக பிரதம மந்திரியின் வறட்சி உதவி நிதியிலிருந்து உதவுவது பற்றி ஆலோசனை செய்வதற்காக 20 பேர் கொண்ட தேசிய கமிட்டியொன்று நியமிக்கப்படவிருக்கிறது. இக்கமிட்டியில் தெற்கு ராஜ்யங்களைச் சேர்ந்தவர்களும் அங்கம் வகிப்பார்கள்.

ரொடீஷியா

### பேச்சுவார்த்தையில் முன்னேற்றமில்லை

சாலிஸ்பரி, நவ. 27

ரொடீஷியப் பிரச்னை பற்றி கவர்னர் கிப்சுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இங்கு வந்துள்ள பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. பௌடன் திரு. அயன் ஸ்மித்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பௌடனுக்கும் திரு. அயன் ஸ்மித்துக்குமிடையில் 2 1/2 மணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப் பேச்சுவார்த்தையின் போது ரொடீஷியா பிரச்னையை பிரிட்டன் ஐ. நா. விடம் கொண்டு செல்வது பற்றி திரு. அயன்ஸ்மித் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

இப் பேச்சு வார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லையென அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

### 'கலாச்சார புரட்சி'க்கு கண்டனம்

மாஸ்கோ, நவ. 27

சீனாவில் செங்காவலர்களால் நடத்தப்பட்டுவரும் கலாச்சாரப் புரட்சி பற்றி சோவியத் பத்திரிகையான 'பிராவ்டா' தனது ஆசிரியத் தலையங்கத்தில் வலுத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இது சோஷலிஸ நாடுகளுடைய பிரிவினையை ஏற்படுத்தவே உதவும் என அப் பத்திரிகை எடுத்துக் கூறியுள்ளது.

### பாரதத்துக்கு ரஷ்ய உதவி

புதுடில்லி, நவ. 27

பாரதத்துக்கு ரஷ்யா ஒரு கோடி ரூபா பெறுமதியான விவசாய இயந்திர உபகரணங்கள் உதவ முன்வந்துள்ளது.

இந்த உபகரணங்கள் ஒரிசா, ஹரியானா, மைசூர், மகராஷ்டிரா ஆகிய ராஜ்யங்களில் விவசாயத் திட்டங்களில் உபயோகப் படுத்தப்படவிருக்கிறது.

### விவாகத்தை பதிவு செய்ய

### சுற்றறிக்கை

சுழிபுரம், ஞாயிறு

யாழ்ப்பாணம், பெரும் பகுதிப் பதிவுகாரர், யாழ்ப்பாணப் பெரும்பகுதி விவாகப் பதிவுகாரர்களுக்கு விவாகத்தைப் பதிவு செய்யாது கணவன் மனைவியாக வாழ்பவர்களின் விவாகங்களைப்பதிவு செய்தல் சம்பந்தமாக ஒருசுற்று நிருபத்தை அனுப்பியுள்ளார்.

சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"பதிவுத்திருமணம் செய்யாது தம்பதிகளாகவாழ்ந்து கொண்டிருக்கும் ஆண்கள்-பெண்கள் இருபாலாரதும் விவாகங்களைப் பதிவு செய்வதற்காக கிராமமுன்னேற்றச்சங்கங்களும் சனசமூக நிலையங்களும் இன்னும் இவைபோன்ற தனிப்பட்ட சபைகளும் ஏற்ற ஒழுங்குகளைச் செய்கின்றன என்பதை அறிகிறேன். விவாகத்தைச் சட்டப்படி பதிவு செய்யாமல் கணவர் மனைவியாக இருப்பவர்களில் அநேகமான குடும்பத்தினர் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்விதமான தம்பதிகளின் விவாகப்பதிவை எவ்வித கட்டணங்களுமின்றி பதிவுசெய்யுமாறு மேற்காட்டிய சபையோ அல்லது சங்கமோ வேண்டிக்கொண்டால் எவ்வித மறுப்புமின்றியும் கட்டணமின்றியும் அப் பதிவைப் பதிவு செய்வீர்களென நிச்சயமாக நம்புகின்றேன். இவ்விதம் செய்வது எமது சமூகத்துக்கு நாங்கள் செய்யும் கடமையாக கருதப்படும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகம்

நல்ல நாகரீகமான அரண்மனையிலிருந்து மக்கள் எல்லாரும் வெளியேறிவிட்டால், அது எப்படி பாழாகத் தோன்றுமோ அதுபோல் எவ்வளவு செல்வங்களிருப்பினும், ஒழுக்கமும் நற்குணமுமில்லாத ஒரு மனிதனுமாவான்.

—மகாத்மா காந்தி.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily; Post Box ... 

Telegrams: EELANADU Jaffna; Telephone ...

யாழ்ப்பாணம் ... கார்த்திகை 13 உ (28-11-66


## ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நடைபெற்று வங்கியின் தலைவர் மற்றும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிய நாடுகள் 'தன் கையே தனக்குதவி' என்ற அடிப்படையில் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ளும் நோக்கத்துடன் இந்த வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள ஏற்பாடுகளில் மாற்றம் செய்யப்படாவிடில் அடுத்த மாதம் 19-ந் திகதி முதல் மணிலாவிலிருந்து இந்த வங்கி செயல்படத் தொடங்கும் நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வங்கியை நமது பிரதமரும் வரவேற்றுள்ளார். இதர ஆசிய நாடுகளும் இதை மனப்பூர்வமாக வரவேற்று அதற்குப் பூரண ஒத்துழைப்பளிப்பதுடன் அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமெனவும் எதிர்பார்க்கலாம்.

ஆசிய நாடுகள் பலவும் அபிவிருத்தி குறைந்த, முன்னேறத் துடிக்கும் நாடுகளாகவே இன்று இருக்கின்றன. இவை தமது அபிவிருத்திக்காக மேற்கத்திய நாடுகளின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலுள்ளன. அமெரிக்காவும் மற்றும் சில நாடுகளும் அபிவிருத்தியடையாத, அபிவிருத்தி குறைந்த ஆசிய நாடுகளுக்கு உதவியளித்து வருகின்றன என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எந்த நாடுமே தனது நலத்தைப் பேணுது வேறு எந்த நாட்டுக்கும் உதவி செய்ய முன்வராது. இதனால் உதவி பெறும் நாடுகள், மறைமுகமாகவோ, நேரடியாகவோ உதவியளிக்கும் நாடுகளுக்குக் கட்டுப்படவேண்டி நேரிடுகிறது. தமது சுதந்திரத்தையே அடகு வைக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. தமது சுதந்திரத்தையும் உரிமையையும் பாதுகாக்க விரும்பும் நாடுகளுக்குத் திடீரென்று உதவி நிறுத்தப்பட்டுவிடுகிறது. இதன் விளைவாக அந்த நாடுகள் மேலும் பல கஷ்டங்களுக்குள்ளாக நேரிடுவதுடன் வல்லரசு முகாம்களாகப் பிரிந்துள்ள இன்றைய உலகில் ஏதாவதொரு பக்கம் சார்ந்து நடுநிலையிலிருந்து பிறழவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது.

இவை தவிர 'உதவி' என்னும் பெயரால் வாங்கும் தொகைக்குப் பெருமளவில் வட்டியும் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தமும் 'உதவி பெறும்' நாடுகளுக்கு ஏற்படுகிறது. 'உலக வங்கி'யிடமிருந்து உதவி பெறும் நாடுகள் வருடா வருடம் கோடிக்கணக்கானரூபாய்களை வட்டியாகச் செலுத்த வேண்டியுள்ள தென்பதை ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸர் சமீபத்தில் ஒளிவு மறைவின்றிப் பகிரங்கமாக வெளியிட்டார். உலக வங்கியும் கூட வசதி படைத்த நாடுகளின் முதலீட்டுடன் அந்த நாடுகளின் கட்டுப்பாட்டில் இயங்குவதுதான்.

அதிக வட்டி செலுத்தாமலும் பிறநாடுகளுக்குக் கட்டுப்பட்டு தமது சுதந்திரத்தைப் பறிகொடுக்காமலும் அபிவிருத்தி குறைந்த நாடுகள் முன்னேற வேண்டுமானால் எந்த நாடும் எந்த நாட்டுக்கும் நேரடியாக உதவியளிக்காமல் ஐ. நா. ஸ்தாபனம் மூலம் உதவி அளிப்பதாக இருக்கவேண்டும். இது இப்போதைக்கு நடைபெறக் கூடியதாகத் தோன்றவில்லை.

இந்நிலையில் ஆசிய நாடுகள் தமது அபிவிருத்திக்குத் தாமே உதவிசெய்து கொள்ளக்கூடிய முறையில் ஆசிய அபிவிருத்தி வங்கியை ஆரம்பித்திருப்பது நன்மையளிக்கக் கூடியதாகவே தோன்றுகிறது. ஆனால் இந்த வங்கியிலும் 'வசதிபடைத்த' மேற்கத்திய நாடுகள் பெருமளவில் முதலீடு செய்ய அனுமதித்தாலும் ஆசிய நாடுகளுக்குள்ளேயே 'வசதி படைத்த' நாடுகளுக்கு 'அதிக உரிமை' அளிப்பதாலும் வங்கியின் நோக்கங்கள் சரியான முறையில் நிறைவேறுவதற்கு இடையூறு நேரலாம். ஆசிய நாடுகள் பலவும் அபிவிருத்தி குறைந்த நாடுகள். எனவே 'பெரிய தொகைகளை' இந்த வங்கி உத்தியோகத்தர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்காமலும் பெரிய திட்டங்களுடன் 'அகலக்கால்' வைக்காமலும் படிப்படியான முன்னேற்றத்துக்கு சரியான முறையில் திட்டமிட்டு சிக்கனமான முறையில் வங்கி செயல்படுவதில் தான் அதன் வெற்றி தங்கியிருக்கிறது.

# குன்றின்மீது குமரன் வீற்றிருக்கும் காரணம்

—கி. வா. ஜகந்நாதன்—

[நேற்றைய தொடர்ச்சி]

ஆண்டவனை மூன்று முறை வலம்வந்தால் கனி கிடைக்குமென்று சிவபெருமான் சொன்னார். கணேசனுக்கு ஆண்டவனை மூன்று முறை சுற்றினாலே போதுமெனத் தோன்றியது. பாவம் அவர் உடம்பு மிகப் பெருத்தவர். அவருக்கு ஏற்றபடி ஆண்டவனை மூன்றுமுறை வலம்வந்தார்; கனியைப் பெற்றுக்கொண்டார். ஆனால் உலகமெல்லாம் மலைமேலே இருக்கும் தண்டாயுணியை வணங்க வேண்டுமே. அதற்காகச் சிவபெருமான் இத்திருவிளையாடலைச் செய்தார். மயில் மீது ஏறிக்கொண்டு முருகன் மிக வேகமாக உலகத்தை வலம்வந்து நின்றான். வந்து கனியைத் தா என்று சொன்னவுடன் முன்னாலே உன் அண்ணன் பெற்றுக்கொண்டான் என்று சிவபெருமான் சொல்லத் திருவிளையாடலாக கோபித்துக்கொண்டான் போலே பழனிமலைமீது ஏறிவிட்டான். அவனுடைய கோபம் நமக்கு லாபம். அதாவது அவன் பூமியில் இருந்தால் பலர் காணமுடியாது. மலைமீதிருந்தால் நெடுந்தூரத்தில் வருவாரும் காணமுடியும். தன்னுடைய அருட்பார்வையை மிக விரிந்த நிலைகட்கெல்லாம் பாய்ச்ச வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டு அந்தப் பெருமான் மலைமீதே ஏறினான். ஏறின எம்பெருமானைக் கண்டு சிவபெருமானும், பார்வதியும் அங்கே அடைந்து அப்பா! நீயே கனியாக இருக்கும்போது உனக்குக் கனியென்று தனியாக ஒன்று வேண்டுமா? என்று கனியக் கனியச் சொன்னார்கள். நீ பழம்; பழம் நீ என்று சொன்னார்கள். அதனால் இன்றைக்கு அந்தத் திருத்தலம் பழநி ஆகக் குறுகிநிற்கிறது. பழனியின் பழைய பெருமையை ஏழு திருமுருகாற்றுப்படையிலும் மலைமேல் அமைந்த முருகப்பெருமானைப் பற்றிப் பாடுகிறார்கள். நான்முகன் சிறையில் இருக்கின்றான். அவன் அங்கே இருந்தமையால் சிருஷ்டித் தொழில் நடைபெறவில்லை. அது நடைபெருததனாலே அதன் பின்னால் வரும் காரியங்களெல்லாம் தடைபடுகின்றன. பெரிய எஞ்ஜினியர் இருக்கிறார். அவர் வானளாவும் கடகோபுரங்களையும் மாடமாளிகைகளையும் கட்டும் பெருவல்லமை படைத்தவர். அவர் அஸ்திபாரம் பறிப்பதற்கு மிகச்சிறந்த மேஸ்திரி ஒருவரையும் வைத்திருக்கிறார். அஸ்திவாரம் பறிக்கிற சிறையிலே போய்விட்டார். ஏதோ குற்றஞ்செய்து அஸ்திவாரம் பறிக்கமுடியவில்லை. எவ்வளவுதான் உயர்ந்த கட்டிடங்களைக் கட்டும் ஆட்கள் இருந்தாலும் அஸ்திவாரம் பறிக்க ஆளில்லாது சும்மாயிருக்கிறார்கள். அவர்கள் திறமையெல்லாம் வாடிப்போய் நிற்கின்றன. அதுபோலத் தான் சிருஷ்டித் தொழிலைச் செய்யும் பிரமாவு சிறையில் இருந்தமையால் சிருஷ்டித் தொழில் நிகழவில்லை. படைப்புத்தொழில் நிகழாமையால் அதன் பின்னால் நிகழும் எல்லாத் தொழில்களும் நிகழாமல் நிற்கின்றன. உலகமே ஸ்தம்பித்து நிற்கின்றது. இதற்கெல்லாம் காரணமென்ன? பிரம்மாவை யார் சிறையில் போட்டார்கள். அகங்காரத்தினாலேமுருகனை மதியாமல் நின்றமையினால் முருகப்பெருமான் அவனைச் சிறையில் அடைத்தான். இதனை உணர்ந்த திருவாவினன்குடியாகிய பழநிக்கு வந்து மலைமேலமர்ந்த ஆண்டவனைப் போற்றுவதற்காகப் பலர் வருகிறார்கள். யார்யார் வருகிறார்கள்? இந்திராதிதேவர்கள் வருகிறார்கள். சிவபெருமானே வருகிறார். திருமாலும் வருகிறார். ஆனால் ஆண்டவனை நேரே போய் அணுகுவதற்கு அவர்களுக்கு அச்சம். பழநிமாமலையில் வீற்றிருக்கும் ஆண்டவனை எதிரேபோய் பார்ப்பதற்கு என்ன செய்யலாமென்று நினைத்தார்கள். வழக்காடச் செல்பவர்கள் தாமே வழக்காடுவதில்லை. வக்கீல்களைக் கொண்டே வழக்காடுவார்கள். நரசிம்மசுவாமியை அணுகுவதற்காக மற்றவர்களெல்லாம் அஞ்சியபோது லக்ஷ்மியை முன்னிட்டுக்கொண்டு அணுகினார்கள் என்று புராணம் கூறுகிறது. அதுபோலவே சிவபெருமானும் திருமாலும் ஏனைய தேவர்களும் இறைவனை, முருகப்பெருமானை அணுகுவதற்கு இறைஞ்சினார்கள். அதற்காக முனிகனிடத்திலே சடுபட்ட முனிபுங்கவர்களை இந்திரியங்களை அழித்த பெருமக்களை எல்லாம் முன்னாலே இட்டுக்கொண்டு அவர்களுக்குப் பின்னாலே முருகப் பெருமானுடைய புகழைப் பாடுகின்ற கந்தர்வர்களையும், கந்தர்வமகளிரையும் முன்னாலே இட்டுக்கொண்டு அவர்கள் போகிறார்கள். எல்லோரும் மிகப் பெரிய பதவியிலிருந்தாலும் பழநி ஆண்டவனுக்கு முன்னாலே தங்களுக்காக அமைந்த குறைகளைச் சொல்லி விண்ணப்பித்துக் கொண்டு அவன் வாயிலாகத் தம் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாமென்று வருகிறார்கள். ஆம் சிவபெருமான் வருகிறார்; அதோ இந்திரன் வருகிறான்; திருமால் வருகிறார். இப்படி எல்லோரும் முருகப்பெருமானின் திருவருளைப்பெறும் பொருட்டு அவனிடத்தி

(5-ம் பக்கம் பார்க்க)

## பயிர்ச்செய்கை பாதிப்பு

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வவுனியா மாவட்டத்தில் மட்டும் 64,000 ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த பயிர் அழிந்துவிட்டதாகவும் சிறிய குளங்கள் வாய்க்கால்கள் உடைப்பெடுத்ததால் நீர்ப்பாசன வசதி சீர்குலைந்துள்ளதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கூட்டிய ஒரு மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை சேதமடைந்த குளங்களையும் வாய்க்கால்களையும் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று மேடைகளில் பேசுவதாலோ அறிக்கைகள் விடுவதாலோ உணவு உற்பத்தி பெருகவும் மாட்டாது; உணவுத் தட்டுப்பாடு இங்கு நீங்கவும் மாட்டாது.

வவுனியா மாவட்டத்திலேயே 64,000 ஏக்கர் நிலத்தில் பயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்குமானால் இதர இடங்களில் எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கும்? அடுத்த ஆண்டில் உணவுத் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கக்கூடும். பயிர் அழிவு ஏற்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் செய்கைபண்ணக்கூடிய முறையில் இலவச விதைநெல் மற்றும் உதவிகளும் வழங்கி ஊக்கமளிக்க வேண்டியது அவசியம். உணவு விவசாய அமைச்சும் காணி நீர்ப்பாசன அமைச்சும் இது பற்றித் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# நாட்டிலும் நகரிலும்

ஸ்ரீலங்கா விரகதந்திரம் அடைவதற்கு முன்பு, அதாவது ஆங்கிலேயர் ஆட்சியின் போது, அரசாங்க சேவையில் புதிதாகச் சேரும் குமாஸ்தாவுக்கு ஒரு பென்சில், பேனை, மைக்கூடு, 'ஒழுங்குநூல்' ஆகியவற்றோடு அச்சிடப்பட்ட ஒரு கற்றை போஸ்ட் காட்டுகளும் கொடுப்பார்கள். அதில் அன்புள்ள ஐயா / அம்மா தாங்கள்......ம் திகதி எழுதிய கடிதம் கிடைக்கப்பெற்றோம். தாங்கள் குறிப்பிட்ட விஷயம்பற்றி ஆகவேண்டியன செய்கிறோம். இப்படிக்கு, தங்கள் தாழ்மையுள்ள ஊழியன் ...... என்று ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருக்கும்.

பொது மக்களிடமிருந்து ஏதாவதொரு விஷயம் பற்றி ஒரு கடிதம் கிடைத்தவுடனே முதல் வேலையாக அந்தக் கிளாக்கர் மேற்படி போஸ்ட்காட் ஒன்றைத் தூக்கி அதில் நிரப்ப வேண்டிய இடங்களை நிரப்பி தபாலில் சேர்த்து விடுவார். கடிதம் எழுதியவருக்கு இது மனதுக்குப் பெரும் மகிழ்ச்சியாயிருக்கும். தமது குரல் அரசாங்கத்துக்கு எட்டிவிட்டதென்று அவர் பூரிப்பார்.

வந்தது 'அப்பே ஆண்டுவ'! இந்தப் போஸ்ட்காட்டுகளும் மறைந்தன. தாழ்மையான ஊழியர்களும் மறைந்தார்கள். தற்சமயமிருக்கும் கிளாக்கர்மாரிடம் தாழ்மையுமில்லை, ஊழியமுமில்லை. 27-ம் திகதி சம்பளம் கிடைத்தால் போதும் என்று இருந்து விடுகிறார்கள்.

எனக்குத் தெரியத்தக்கதாக ஒரு நண்பர் ஒரு விஷயமாகக் கடந்த ஒன்றரை வருடமாக அரசாங்கத்துக்கு எழுதிக் கொண்டு வருகிறார். சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு எழுதினார். மறுமொழியே இல்லை. அரசாங்க சேவை கொமிஷனுக்கு எழுதினார். மறுமொழி இல்லை. மந்திரியாருக்கு எழுதினார். மறுமொழி இல்லை.

பொதுமக்களுக்கு அரசாங்கத்தில் எப்படி நம்பிக்கை பிறக்கும் சொல்லுங்கள் பார்க்கலாம். 'உன்னுடைய கடிதம் கிடைத்தது. அதற்கு ஆக வேண்டியது செய்கிறோம்' என்று ஒருவரி எழுதியிருந்தால் அவருக்கு எவ்வளவு ஆறுதல் கிடைத்திருக்கும்.

ஒரு சிறு உதாரணம் பாருங்கள். 'ஐ. நா. சபையில் எம். எஸ். செய்த கச்சேரியை ஆகாஷவாணி ஒலிபரப்பியதை நாங்கள் கேட்கத் தவறிவிட்டோம். அதை இன்னொரு முறை ஒலிபரப்புங்கள்' என்று ஒருவர் சென்னை 'ஹிந்து' பத்திரிகைக்கு கடிதம் எழுதியிருந்தார். பிரபலமான ஒரு பத்திரிகை, பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கும் என்ற நம்பிக்கையுடன் அவர் நேரடியாக ஆகாஷவாணிக்கு எழுதாமல் பத்திரிகைக்கு எழுதினார். ஆகாஷவாணியின் கண்களில் அந்தக் கடிதம் தென்பட்டது. பொதுமக்கள் பலரின் விருப்பத்தைத் தெரிவித்த அக்கடிதத்துக்கு உடனே அது 'ஹிந்து' பத்திரிகை மூலமாகவே பதில் அளித்துவிட்டது.

எம். எஸ். ஸின் கச்சேரி மறுபடியும் வருகிற டிசம்பர் மாதம் 15-ம் திகதி இரவு 9-30 மணிக்கு சென்னை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்படுமென்று ஆகாஷவாணி அந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீதிபதிகள், வழக்கறிஞர் சுதந்திரமாக இருக்கவேண்டும்"

## விருந்துபசாரத்தில் நீதியரசர் சிவசுப்பிரமணியம்

திருநெல்வேலி, திங்கள் இலங்கையிலுள்ள நியாயவாதிகளிலிருந்து முதன் முதலாக நீதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது மாத்திரமல்லாமல், யாழ்ப்பாணத்தில் நியாயவாதியாகக் கடமையாற்றியவர்களிலும் முதன் முதலாக நீதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டவர் திரு. சிவசுப்பிரமணியமே. நியாயவாதிகளுடனும் பொதுமக்களுடனும் மிகப் பண்பாட்டுடன் பழகும் இவர் வவனியாவில் நீதிபதியாகக் கடமையாற்றுகையில் நீதிபதிகளுக்குத் தனிப்பட்ட வீடுகள் அமைப்பது சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி அதில் வெற்றியும் கண்டவராவார். இவர் நீதியரசராக பதவி உயர்வு பெற்றமையையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்

மேற்கண்டவாறு நீதிபதி திரு. சிவசுப்பிரமணியம் நீதியரசராகப் பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு யாழ்ப்பாணம் வழக்கறிஞர்கள் சங்கத்தினரால் "யாம் கோட்" வாடிவீட்டில் நேற்றிரவு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் வழக்கறிஞர் திரு. எம். தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு. ஏ. வி. குலசிங்கம் பேசுகையில், ஒரு நீதிபதிக்கு உரிய அத்தனை குணதிசயங்களும் இவருக்கு உண்டென்றும், இவருக்கு நீதியரசர் பதவியைக் கொடுக்காமலிருக்க முடியாதென்றும் சொன்னார். புரக்டர் திரு. திருநாவுக்கரசு பேசுகையில், திரு. சிவசுப்பிரமணியம் நியாயவாதியாகக் கடமையாற்றிய காலங்களில் தனது வாதாடும் திறமையினால் நீதிபதிகளைக் கவர்ந்தாரென்றும் ஆனால் இன்று அவர் நீதியரசராக வந்துள்ளதால் அந்தக் கவர்ச்சி எதிர்ப்பக்கமாக மாறிவிட்டதென்றும் சொன்னார்.

தனக்களிக்கப்பட்ட விருந்துபசாரத்துக்கு நன்றி தெரிவித்து திரு. சிவசுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

நீதிசெலுத்துகையில் எப்போதும் நீதிபதிகளும், நியாயவாதிகளும் தனித்தனியே சுதந்திரமாக இயங்கக்கூடியதாக இருக்கவேண்டும். யாழ்ப்பாணம் நியாயவாதிகள் இலங்கையிலுள்ள எந்தச் சிறந்த நியாயவாதிகளுக்கும் சளைத்தவர்களல்ல என்ற அபிப்பிராயம் இலங்கையில் நிலவுகின்றது. இதனையிட்டு நானும் யாழ்ப்பாணத்து நியாயவாதிகளில் ஒருவன் என்ற ரீதியில் பெருமையடைகின்றேன். நான் கலப்பற்ற ஒரு யாழ்ப்பாண நியாயவாதியாக இருந்து நீதியரசராகப் பதவி உயர்வுபெற்றதையிட்டு யாழ்ப்பாண வழக்கறிஞர்கள் சங்கம் எனக்கு அளித்த விருந்துபசாரத்துக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. என். எம். ஜெராஜெந்திரம், உதவி மாவட்ட நீதிபதி திரு. பார்லட், யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு வீ. ஜெ. ராஜரட்ணம், வழக்கறிஞர் திரு. வி. தியாகலிங்கம் கியூ. ஸி. உட்பட நூற்றுக்கு மதிகமான வழக்கறிஞர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

# மேலும் பல தொழில் ஸ்தாபன ஊழியருக்கு சம்பள நிர்ணயம்

கொழும்பு, திங்

மேலும்பல தொழில்ஸ்தாபனங்களை சம்பளநிர்ணய சபைத்திட்டத்தின் கீழ் கொண்டுவர தொழில் அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

ஜவுளிவர்த்தகஸ்தாபனங்கள், நெல்குத்தும் ஆலை, சிகை அலங்காரம்செய்யும் நிலையம், தியேட்டர், பிளாஸ்டிக் பொருட்கள்உற்பத்தி நிலையம், பெட்ரோல் நிரப்பும் நிலையம், தனிப்பட்ட வைத்தியநிலையம். சலவைத் தொழில்நிலையம்ஆகியஸ்தாபனங்களில் கடமையாற்றும் தொழிலாளர்கள் இதனால் நன்மைபெறவிருக்கிறார்கள்.

சாப்புச் சட்டத்தை மீறியதாக சுமார் ஆயிரம்வழக்குகள் முதலாளிமார் மீது தொடரப்பட்டுள்ளதாகவும் இதில் 50 வீதமான வழக்குகளில்வெற்றிகிடைத்துள்ளதாகவும்அமைச்சு அறிவித்துள்ளது.

## பிச்சைக்காரரை அகற்ற இயக்கம்

கொழும்பு, ஞாயிறு

கொழும்புத் தெருக்களிலிருந்து பிச்சைக்காரரை அகற்றும் இயக்கமொன்றினை அரசாங்க பாராளுமன்றக்குழு அங்கத்தவரான திரு. ஜோர்ஜ் அபயகுணசேகரா ஆரம்பித்துள்ளார். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை இலங்கைக்குக் கவர்ந்திழுக்கும் முயற்சியில் இன்று அரசாங்கம் இறங்கியுள்ள இந்நேரத்தில் அரசாங்கம் இத்தவிஷயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டியதவசியம் என அவர் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

## சீனித் திட்டத்தினால் பெரும் இழப்பு

கொழும்பு, ஞாயிறு

கல்ஓயா அபிவிருத்தித் திட்ட சபையின் சீனி உற்பத்தித் திட்டம் அதன் முதல் ஆறு (1959-60 லிருந்து 1964-65 வரை) வருடங்களில் ரூ. 6 கோடி 45லட்சம் மொத்தமாக இழந்துள்ளது. சீனி உற்பத்தித் திட்டம் தற்போது ஆறுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் கீழுள்ளது.

## பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டம்

வட்டுக்கோட்டை, ஞாயிறு

அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர்சங்கத்தின் பொதுக்கூட்டம் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. மு. சதாசிவத்தின் தலைமையில் நடைபெற்ற போது பாடசாலைக் கட்டடம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் விவசாய செய்முறைக் கல்வி பாடசாலையில் பயிற்றப்படல் வேண்டுமெனவும், சங்கீத ஆசிரியரொருவர் நியமனம் பற்றி ஒரு குழு வித்தியாதிகாரியைப்பேட்டி காண வேண்டுமென்றும் ஆங்கில மொழிக் கல்வியின் தரத்தை உயர்த்த வழிவகைகள் கையாளப்படல்வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டன.

புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவும் நடைபெற்றது.

## குன்றின்மீது...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து இறைவனை அடைந்த சிறையின் சாவியை வாங்கிக்கொள்ளும்பொருட்டு வருகிறார்கள். அவர்களுக்குத் தந்திரம் தெரியும். முருகனைப் பூவுலகத்திலே அணுகவேண்டுமானால் எவ்வளவு பதவி அடைந்தாலும் அவனை அணுகமுடியாது. பக்தி படைத்தால்தான் அணுக முடியுமென்ற அவர்கள் தேர்ந்து இருக்கிறார்கள் ஆகவே தேவ உலகத்திலிருந்து வந்த மூர்த்திகளாய் இருந்தாலும் பூவுலகத்தில் இந்திரியங்களைத் தவிர்த்து முருகனையன்றிப் பிறிதொரு பொருளை மனத்தில் எண்ணாது அவனையே நினைந்து வாழ்கின்ற பெரியவர்களான முனிபுங்கவர்களை முன்னிட்டுக்கொண்டு வருகிறார்கள். அப்படி வந்து இறைவனைத் தோத்திரம் செய்கிறார்கள். இப்படித் திருமுருகாற்றுப்படை சொல்கிறது. மலையிலிருக்கும் ஆண்டவனிடத்து பூவுலகத்திலுள்ள மக்கள் தங்கள் குறையைப் போக்கிக்கொள்வார்கள் என்பது மாத்திரமல்ல தேவலோகத்திலுள்ளவர்கள் மிகப் பெரியவர்கள் சிவபெருமான் முதலியோர்கள்கூட மலையாண்டியான குறிஞ்சிக் கிழவனிடத்து வந்து எம்பெருமானே! எமது குறை நிரம்பவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்கிறார்கள். உண்மையிலே உலகத்தில் குளிர்ச்சி வரவேண்டுமானால் எங்கும் மழை பெய்யவேண்டும். மழை பெய்திருந்தால் மாத்திரம் போதாது. மழை பெய்தபோது அதன் நீரைத் தேக்கி அது அருவியாகப் பின்பு ஆறாக வரவேண்டும். நீரை தேக்குவதற்கு வேண்டியது குளமுமல்ல; குட்டையுமல்ல. மலைகளின் மேல் நீர் பெய்ததானால் அது அருவியாக ஓடிவந்து பின் ஆறாகப் படரும். உலகிலுள்ள எல்லா இடங்களிலும் ஆறுகள் வளம்படுத்துகின்றன என்று சொன்னால் அந்த ஆற்றை வளம்படுத்தும் செவிலித்தாயாக நிற்பன மலைகள். எனவே மலைகளால் மலை மாத்திரம் குளிர்ச்சியடையவில்லை. ஏனைய இடங்களும் குளிர்ச்சியடைகின்றன. மலையில் பிறந்த ஆறு கடலில் சென்று கலக்கும் வரைக்கும் எங்கும் வளம் பெருக்குகின்றது. 'மலைத்தலைய கடற்காவிரி' என்று பழங்காலத்து நூல் சொல்லும். மலையிலே தோன்றுகின்ற அந்தக் குளிர்ச்சியையும், மலையிலே தோன்றுகின்ற அந்த நீரையும் காப்பாற்றி உலகெலாம் பெறும்பொருட்டு வழங்குகின்றவன் முருகன்தான். நாம் பார்க்கின்ற இந்த நிலத்தை விளைவிக்கின்ற ஆற்றை மாத்திரமா அவன் காப்பாற்றுகிறான். உலகத்தில் வெப்பத்தினாலே துன்புற்று மூன்றுவகைத் தாபத்தினால் அழிந்து சம்சாரத் தொல்லையில் அகப்பட்டுக்கொண்டு அஞ்ஞானமென்ற இருளில் நின்று பொருள் இன்னதென்று தெரியாமல் தடவித் தத்தளித்துவாழ்கிற மக்களுக்கு அவன் ஜோதி சொரூபமாக நிற்பது மாத்திரமல்ல அவனுடைய உள்ளத்தில் உள்ள வெம்மையெல்லாம் அகற்றி மலத்தினாலுண்டாகும் நோய்களை எல்லாம் போக்கித் தன்னுடைய அருள் ஆற்றைப் பாய்ச்சுகிறான். அந்த அருள் ஆறானது அருள்மழை பொழிவதனாலே வந்தது. கந்தகிரியில் நின்ற எம்பெருமான் உலகிலுள்ள மக்களிலும் நின்று [illegible] அருவியாக

வந்து. பின்பு அருள் ஆறாகப் படர்ந்து உலகிலுள்ள உயிர்களையெல்லாம் வளர்த்து நிற்கின்றன.

(நாளை முடியும்)

# சட்டவிரோதமாக இறக்குமதியான சாரங்களை வைத்திருந்தார்

## அபராதம் ரூ.100; பொருட்கள் பறிமுதல்

மாவிட்டபுரம், ஞாயிறு

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் 1000 ரூபா பெறுமதியான சாரங்களை சைக்கிளில் கடத்திச் சென்ற ஒருவருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் 1000 ரூபா பெறுமதியான சாரங்களையும் வடபகுதி சுங்க உதவிக் கலெக்டர் திரு. கே. கந்தசாமி பறிமுதல் செய்துள்ளார்.

மேற்படி நபர் சில தினங்களுக்கு முன் சைக்கிளில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சாரங்களுடன் சைக்கிளில் செல்லுகையில் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டார். இதுசம்பந்தமாக நேற்று வடபகுதி சுங்க உதவிக் கலெக்டர் திரு. கே. கந்தசாமி விசாரணை நடத்தினார். விசாரணையின் போது முன்னர் சுங்கப்பகுதியினரால் விடுவிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து இச்சாரங்கள் வாங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. சுங்கப் பகுதியினரால் விடுவிக்கப்பட்ட நபரும் இச்சாரங்களைத் தாம் விற்றதாகவும் அச்சாரங்கள் முன்னர் சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்பட்டு விடுவிக்கப்பட்டதென்றும் கூறினார். ஆனால் சுங்கஸ்தா பேஜுக்களைப் பரிசிலனைசெய்தபோது விடுவிக்கப்பட்ட சாரங்கள் சங்கு மார்க் சாரங்கள் என்றும் இப்போது கைப்பற்றப்பட்டுள்ளது 'மட்ருல் பனேகார்ட்' சாரங்கள் எனவும் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உதவிக் கலெக்டர் சாரங்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டதுடன் சைக்கிளில் கொண்டுசென்றவருக்கு 100 ரூபா அபராதமும் பொய்ச்சாட்சி கூறவந்தவருக்கு 50 ரூபா அபராதமும் விதித்தார்.

# 4 இளம் பெண்களை காணவில்லையாம்

## சுன்னாகத்தில் பரபரப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

கடந்த இரண்டு வாரங்களில் சுன்னாகம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த நான்கு இளம்பெண்கள் மாயமாய் மறைந்துவிட்டார்கள் என அறியப்படுகிறது. இவர்களின் இந்த மர்மமறைவு குறித்து இவர்களின் பெற்றோர்கள் பொலிசில் புகார் செய்து இருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிவசிதம்பரம் இரத்தினம்மா சுன்னாகம் பொலிசில் செய்த புகார் ஒன்றில் தனது 18 வயது நிரம்பிய திருவருள் தேவி என்னும் மகளைக் காணவில்லையென்றும் சம்பவ தினம் திருவருள்தேவியின் சிநேகிதியும் உறவினருமான கண்ணமலர் சோதி தங்களுடைய வீட்டிற்குவந்து தனக்கு உதவிக்காக திருவருள் தேவியைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டதாகவும் தான் அதற்குச் சம்மதித்து கண்ணமலர் சோதியுடன் தனது மகளை அனுப்பியதாகவும் பிறகு கண்ணமலர் சோதி வீட்டிற்குச் சென்று மகளைத் தேடியபோது மகளைக் காணவில்லையென்றும் அங்கு விசாரித்தபொழுது தமது மகளுடன், கண்ணமலர் சோதியையும், அவரின் சகோதரரான சிவசுப்பிரமணியத்தையும் காணவில்லையென்றும் கூறியுள்ளார்.

நேற்றிரவு புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி பூபாலு இராசமணி என்பவர் பொலிஸில் செய்துள்ள புகார் ஒன்றில் தனது சகோதரியாகிய விமலாதேவி (வயது 18) நேற்றிரவு தன்னுடன் படுத்திருந்தவரென்றும், அதிகாலை 5 மணியளவில் எழும்பிப் பார்த்தபோது அவரைக் காணவில்லை என்றும் அவருக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஏற்கனவே சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த சின்னத்தம்பி தங்கப்பிள்ளை என்பவர் தமது கன்னிராசவியம்மா கோவிலுக்குச்சென்றவரென்றும் பிறகு அவர் திரும்பி வரவில்லையென்றும் அவர் தங்கள் வீட்டிற்கு அடிக்கடிவரும் ஒருவருடன் சென்றிருக்கக்கூடுமென்றும் ஏழாலையைச் சேர்ந்த சின்னத்துரை சதாசிவம் என்பவர் தமதுமகள்ரஞ்சிதமலர் சம்பவதினம் படுக்கைக்குச் சென்றவரென்றும் அதிகாலை எழும்பிப் பார்த்தபோது அவரைக்காணவில்லையென்றும் அவர்தமது பள்ளிக்கூட சக மாணவரான ராஜகாரி பொன்னையாவுடன் சென்றிருக்கக்கூடுமெனவும் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் அருமையான இலங்கை வானொலி இருக்கிறதே! அதற்கு விடிந்தது. பொழுதுபட்டது தெரியாது. எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஐ. நா. வுக்குப் போனது; அங்கே கச்சேரி செய்தது; அதை ஆகாஷவாணி ஒலிபரப்பியது — எல்லாமே அவர்களுக்கு அறியாமை அல்லது அலட்சியமோ?

ஆகாஷவாணி அதிகாரிகளுக்கு ஒரு தந்தி அல்லது கடிதம் அனுப்பியிருந்தால் அவர்கள் எம். எஸ் கச்சேரியின் ஒலிப்பதிவுப் பிரதி ஒன்றை அனுப்பியிருப்பார்கள் அல்லது ஆகாஷவாணி ஒலிபரப்பும்போது அதை அஞ்சல் செய்திருக்கலாம்.

இதுபற்றி முன்பும் ஒரு தடவை இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தேன் மறுபடியும் எழுதுகிறேன். எம். எஸ். அவர்கள் உலகசபையில் நமது தமிழ் சங்கீதத்தைப் பாடியது ஒரு சரித்திர நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை இலங்கையிலுள்ள இசைப்பிரியர்கள் கேட்க ஆவலாயிருப்பார்கள் என்பது திண்ணம்.

டிசம்பர் 15-ம் திகதியையாவது இலங்கை வானொலி மறக்கமாட்டாதென்று எதிர்பார்ப்போமாக!

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலை செய்ய எத்தனித்ததாகவழக்கு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்ததம்பு ஏரம்பமூர்த்தி தம்பு தியாகராசா ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த குமாரன் வல்லிபுரம் என்பவரைக்கடந்த ஆவணி மாதம் 25-ந் திகதி வயிற்றில் குத்தி கொலை செய்ய எத்தனித்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு, பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு றொபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

டாக்டர் ஆர். சோமசுந்தரம், டாக்டர் ஆர். திருநாவுக்கரசு ஆகியோர் சாட்சியமளித்தனர்மேல்விசாரணை 1-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம

சங்கானை, ஞாயிறு

சங்கானை கிராமக் கோர்ட்டில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஏ. சந்திரசேகரம் மட்டக்களப்பிற்கும், உதவி லிகிதராகக் கடமையாற்றும் திரு. கே. சுப்பிரமணியம் ஏழாலுக்கும் ஜனவரியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரிய வருகிறது.

## பிணையில்செல்ல அனுமதி

மாவிட்டபுரம், ஞாயிறு

வேலைக்காரச் சிறுமியைத் துன்புறுத்தியதாக செய்யப்பட்ட புகார்ஒன்றின் பரில் சுன்னாகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட உரும்பிராயைச் சேர்ந்தவர்களான திருமதி தேவகிஇராசசூரியர், திருமதிஎம்.ஏ குணரட்ணம்ஆகிய இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்கள். இவர்களுக்கு கோர்ட்கைட்டளை வரும்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஞானவைரவர் ஆலயத்தில் இன்றுதொடக்கம் 21நாட்களவரை காலையும் மாலையும் பிள்ளையார்கதை படிப்புநடைபெறும். லட்சார்ச்சனையும் நடைபெறும்,

பொழுதுகோர்ட்டில் ஆஜராகும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'தமிழ் ஒலிக்காத இடம் இல்லை'

நாவலப்பிட்டி, ஞாயிறு

"மலரையும் வாசனையையும் வேறு வேறாக பிரிக்க இயலாது. அதுபோல், தமிழ் மொழியோடொன்றிய முருகனையும் பிரிக்க முடியாது. செந்தமிழ் மேல் பற்றுகொண்ட முருகப்பெருமான் தமிழ் நாட்டில் பிறந்தார். வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமான் தமிழின் இனிமையில் மயங்கியே நன்மை புரிகிறார். தமிழ் நாட்டில் பிறக்கும் குழந்தை 'அம்மா' என்ற ஓசையிட்டு அழுகிறது. இங்கிலாந்தில் பிறக்கும் குழந்தையும் அம்மா என்றே அழுகிறது. அம்மா என்ற சொல் நம் செந்தமிழுக்குச் சொந்தம். ஆகவே நம் தமிழ் ஒலிக்காத இடம் உலகில் இல்லை என்றே கூறலாம்"

இவ்வாறு திருமுருககிருபானந்த வாரியாரின் பிரதம சிஷ்யை திருமதி மா. சண்முகவள்ளி அம்மையார் நாவலப்பிட்டி கதிரேஷன் கல்லூரியில் 'முருகும் தமிழும்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துகையில் கூறினார்.

## 'தொழிலாளருக்கு அள்ளிக்கொடுத்தார்களா?'

நாவலப்பிட்டி, ஞாயிறு

"தேயிலை விலைவீழ்ச்சியின் காரணமாக எத்தனையோ தோட்டங்கள் தொழிலாளர்களுக்கே தெரியாமல் விற்கப்படுகின்றன. புதுநிர்வாகிகளும், புதுப்புது சட்ட திட்டங்களைத் திணித்து தொழிலாளர்களை துன்புறுத்தசெய்கிறார்கள். விலைவீழ்ச்சியில் இன்று தோட்டங்கள் யாவும் நஷ்டத்தில் ஓடுகின்றன எனக் கூப்பாடு போடும் தோட்ட முதலாளிமார்கள் லட்சலட்ச ரூபாய்களை லாபமாகப் பெறும் போதுமட்டும் நமக்கு அள்ளியா கொடுத்தார்கள்",

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாவலப்பிட்டி மாவட்டப் பிரதிநிதி திரு. சந்தோஷம், கிரீன்வுட் தோட்டத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது கூறினார்.

## சிருங்கேரி சங்கராச்சாரியார் உதவி

புதுடில்லி, நவ.27

பீகாரில் ஏற்பட்டுள்ள வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவுமுகமாக சிருங்கேரி ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் 1001ரூபா உதவியுள்ளார். இதனை அவர் பிரதமர் இந்திராவிடம் ஒப்படைத்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். உதைபந்தாட்டத்துக்கு கிழக்கு ஜெர்மன் பயிற்சியாளர்

## அரசாங்க அதிபர் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

''உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுதோ சரி அல்லது தெ னிலங்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதோ சரி வட இலங்கையின் உதைபந்தாட்டத்தின் தரக்குறைவுக்குக் காரணம் இங்கு போதிய விளையாட்டு மைதானங்கள் இல்லாததேயாகும் இங்குள்ள உதைபந்தாட்டப்பயிற்சியாளர்களுக்கு சிறந்த விளையாட்டு நுணுக்கங்களைப் பற்றி வெளிநாட்டு ஆலோசனைகளைத் தெரியப்படுத்தாததும் ஒரு காரணமாகும். இந்த நிலையில் வடபகுதிக்கு கிழக்கு ஜெர்மன் உதைபந்தாட்டப்பயிற்சியாளர் திரு. பெல்ஜர்சமூகம் கொடுத்திருப்பது ஒரு வரப்பிரசாதமாகும்''.

இவ்வாறு யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில்நடைபெற்றநொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் சாம்பியன் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூறினார்.

இந்த வைபவத்திற்கு திரு ஈ. சபாலிங்கம் தலைமை வகித்தார். கிழக்கு ஜெர்மன் உதைபந்தாட்ட பயிற்சியாளர் திரு.பெல்ஜரும் கலந்து கொண்டார்.

# 'ஆத்மீக ஒளியினுலேயே உலகம் ஒளிபெறும்'

## சுவாமி ரங்கநாதானந்தஜீ

வெள்ளவத்தை, சனி

''மனிதன் தன் நினைவுகளின் உயர் நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளான். வெளியில் தெரியும் மனிதனின் எண்ண அலைகளோ ஏராளம். அதனால் அவன் உள்ளத்தைப்பற்றிக் கவலைப்படுவதாக இல்லை'' என்று ஸ்ரீமத் ரங்கநாதானந்தஜீ குறிப்பிட்டார். கொழும்பு விவேகானந்தசபை, கொழும்பு ஸ்ரீ ராமகான சபா ஆதரவில் கமலா மோடி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு நீதியரசர், திரு வி. சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

நீதியரசர் தமதுஉரையில், விரிவுபட்ட இவ்வுலகின் நாற்புறங்களிலும் சமய ஒளி பரப்பிவரும் இராமகிருஷ்ண சங்கத்தினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். இச் சங்கத்தைச் சேர்ந்த ரங்கநாதானந்தஜீயை ஈழத்தவர் சார்பில் நேசக்கரம் நீட்டி வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

''உபநிஷதங்களின் சக்தி'' என்னும் பொருள் பற்றி சுவாமிஜீ உரை நிகழ்த்தினர்.

உலகமே இன்று இருளில் மூழ்கியிருக்கிறது. வானத்தின் ஒளியையும், மின்வெளிச்சத்தையும் விட மேலான ஆத்மீக ஒளியினுல் மட்டுமே உலகம் ஒளிபெறும். இவ்வான்ம ஒளியைப் பெற மனித சமுதாயம் தன் உள்ளத்தை அறிய முனையவேண்டும். மெழுகு வர்த்தியைப் போன்ற இம்மாய வாழ்வு மறைவது திண்ணம். ஆனால் மனிதன் தன் சிறப்பைத் தடுக்க வழியுண்டா என்ற கேள்வியில் ஆய்வு செய்கிறுல் மனிதவாழ்க்கை ஒடுநிழல்தத்துவார்த்தமே'' என்றார் அவர்.

---

## வயனஸ்கிளப் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணவயனஸ்கிளப் ஆண்டுவிழா யாம்கோர்ட்டில் சிறப்பாக இம்மாதம் 23ந்திகதி கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்திற்கு டிஸ்றிக்ட்கவர்னர் திரு கே. சச்சிதானந்தா உத்தியோகபூர்வமான முறையில் விஜயம்செய்து விழாவைச் சிறப்பித்தது மல்லாமல் எங்கள் அங்கத்தவர்களுக்கும் அறிமுகம்செய்துவைக்கப்பட்டார். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா திருமதி அபயசேகரா யாழ் முனிசிபல் கமிஷனர் மற்றும் அரசாங்கஇலாகாக்களின் தலைவர்கள், வர்த்தகர்கள், வங்கிமனேஜர்கள் ஆகியோர் விழாவின் பின்னர் நடைபெற்றஇராப்போசன விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள உதவி வேண்டியவர்களுக்கு லயன்ஸ்கிளப் எவ்வாறுஉதவலாம் எனவும் கிளப்பின் கடந்தகால சேவைகள் பற்றியும்தலைவர்தனது பேச்சில் குறிப்பிட்டார்.

# விவசாயிகளுக்கு ஆலோசனை

சுழிபுரம், ஞாயிறு

அரசாங்கத்தின் உதவியுடன் ஆலோசனைகளைப் பெற்று விவசாயம், தோட்டச்செய்கை போன்ற உணவு உற்பத்தி விடயத்தில் கவனம் செலுத்தும் ஒவ்வோர் குடியானவனும் அதிக நன்மையை அடையலாம். இன்று நாட்டுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை விவசாய உத்தியோகத்தர்களின் ஆலோசனைப்படி செய்து வருவதால் அதிக உணவு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதனுல் கமக்காரர்கள் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் தமது உழைப்பையும் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். மேற்கண்டவாறு சுழிபுரம் மேற்கு வடநோக்கக் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர் மத்தியில் பேசிய வலிமேற்கு விவசாய போதனுசிரியர் திரு. ரி. குமாரவேல் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. இ. மாரிமுத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

# கிழக்கு ஐரோப்பிய உருளைக்கிழங்கு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை இப்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து உருளைக்கிழங்கு வாங்கிவருகிறது. வழக்கமான விலைகளிலும் குறைவாகவே இந்த நாடுகள் கொடுக்கின்றன.

சென்ற வாரம் ஹங்கேரியிலிருந்து 2000 தொன் உருளைக்கிழங்கு வந்துசேர்ந்தது. இதற்கு முன்னதாக ரூமேனியாவுடன் உணவு இலாகா ஒப்பந்தம் ஒன்று செய்திருந்தது ரூமேனியாவின் விலை தொன்னுக்கு 21—22 பவுணுக்கிடையே இருந்தது. ஒல்லாந்து கூறிய விலை தொன்னுக்கு 25—26 பவுணுக்கிடையேயாகும்.

அடுத்த மாத ஆரம்பத்தில் இன்னும் 2000 தொன் இம்முறை [illegible] துவரும். இ[illegible] களை முன்னிட்டு உணவு இலாகா ரூமேனியாவுடன் செய்துள்ள ஒப்பந்தப்படி [illegible] 2800 தொன் இங்கு வந்துசேரும்.

# செய்திச் சுருக்கம்

## விலைக்கட்டுப்பாடு

இறக்குமதி செய்யப்படும் ஆங்கில மருந்து வகைகள் கூடிய விலைக்கு வியாபாரிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதால் விரைவில் இம் மருந்துகட்கு விலைக்கட்டுப்பாடுவர இருக்கின்றது.

## இன்று பயணம்

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஆசியபிராந்திய ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்ள இலங்கைதொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு.எஸ். தொண்டமான் இன்று சிங்கப்பூர் செல்கிறார்.

## தீவிர முயற்சி

வீதிகளிலும் கடைப்படிகளிலும் திரியும் பிச்சைக்காரர்களை தொழில் துறைகளில் வேலைக்கமர்த்த சமூக சேவை அமைச்சு தீவிரமாக ஈடுபடவிருக்கிறது.

## கடன் வசதி

செத்தல்மிளகாய் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடன்வசதியளிக்க அரசாங்கம் உத்தேசித்து வருகிறது.

## பிரசாரம்

இரத்த வங்கிகளில் அடிக்கடி ஏற்பட்டுவரும் இரத்தத்தட்டுப்பாட்டினை நீக்க இலங்கை பூராவும் பிரசார இயக்கங்களை மேற்கொள்ளவும் மாதா மாதம் வேண்டிய இரத்தத்தை சேகரிக்கவும் சுகாதார அமைச்சு முடிவுசெய்துள்ளது.

## சிபார்சு

அரசினர்சேவையில் கட்டடக் கலைஞர்களை அதிகரிக்கச் செய்வதற்கு தொழில் பயிற்சி நிலையத்தில் உள்ள கட்டடக் கலைப்பிரிவை உடனடியாக சர்வகலா சாலையின் சிறப்புத்துறையாக மாற்றவேண்டுமென 6 நிரந்தரக் காலிய தரிசிகளைக் கொண்ட ஆலோசனைக் கமிட்டி அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்துள்ளது.

## உதவி மான்யத்தை கூட்டுக

இந்து சமய விவகார ஆலோசனைக்கமிட்டிதனக்கு வழங்கப்படும் அரசாங்க மான்யத்தை இரண்டு இலட்சம் ரூபாயாக அதிகரிக்க வேண்டுமென உதவி கல்வி அமைச்சிடம் கேட்டுள்ளது.

---

## பாடசாலை வசதிகளைக் கவனிக்க நடவடிக்கை

வல்வெட்டித்துறை ஞாயிறு

பருத்தித்துறை எம். பி. திரு, க. துரைரத்தினம், யாழ்-மாவட்ட உதவி வித்தியாதிபதி திரு. எஸ், தணிகாசலம் ஆகியோர் பருத்தித்துறை உயர்தர பெண் பாடசாலைக்கும், சித்திவிநாயகர் பாடசாலைக்கும் விஜயம்செய்து தளபாடம், கட்டிடவசதி, பெண்கள் தங்கும் விடுதி ஆகியவற்றைப் பார்வையிட்டு உடனடியாகச் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விபரங்களை எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

# பாடசாலை ஊழியர் தீர்மானங்கள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அகில இலங்கை சுவாதீனப்படுத்தப்பட்ட பாடசாலை ஆசிரியரல்லாத ஊழியர்சங்க வடபிரதேசப் பொதுக்கூட்டம் ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் திரு. திரு பி. ஏ பாலிப் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சியைச் சேர்ந்த பதினூறு பாடசாலை ஊழியர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1-12-60-ல் 50 வயதை அடைந்தவர்களை அரசாங்க பாஷை சட்டத்திலிருந்து விலக்க வேண்டும்.

அரசாங்க பாடசாலையில் உள்ள ஊழியர்களுக்கும் சுவீகரிக்கப்பட்ட பாடசாலையிலுள்ள ஊழியர்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

எழுத்துவினைஞர்களுக்கு 3 வருடமும் பாடசாலை ஊழியர்களுக்கு 5 வருடமும் ''புறப்பேசன் பீரியேட்'' இருப்பதால் அந்தவித்தியாசத்தையும் அகற்றும்படி வேண்டல்.

திருவாளர்கள் திரு. கே. நடராசா, திரு. நவரத்தினம் ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

---

# ஒருமாதச் சிறை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கனிபா அல்லது மஜீத் என்று அழைக்கப்படுபவர் பருத்தித்துறை பொலிஸ் கண்காணிப்பில் இருந்துவந்த சமயத்தில் பொலிஸ் கண்காணிப்புக்குச் சமுகமளிக்கத்தவறிய குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ருபேர்ட் சில்வாவினுல் ஒருமாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# சைக்கிளைப் பறித்தனராம்

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள நுணுவில் என்னும் இடத்தில் கே. சிவகுரு என்பவருக்குச் சொந்தமான சைக்கிள் ஒன்றையும் காசு 63 ஐயும் எஸ். செல்வம், எஸ் சின்னத்தம்பி, ஏ. சண்முகராசா, கே, சின்னத்துரை ஆகிய நால்வரும் மேற்படி நவரைத்தாக்கிப் பறித்ததாகச் சாவகச்சேரிப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து, சாவகச்சேரிப்பொலிசார் சந்தேக நபர்கள் நால்வரையும்கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் ருேபேட் சில்வா முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபர்கள் நால்வரையும் தலா ரூபா 250 பிணையில் செல்ல அனுமதித்து மேல்விசாரணையை இம்மாதம் 29-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

# இயந்திரம் பழுது ஊழியர் இடமாற்றம்

சமிகாலை, ஞாயிறு

சமிகாலை விவசாய இலாகாவில் உள்ள படக்காட்டிகாண்பிக்கப்படும்இயந்திரம் பழுதடைந்தநிலையில் இவ்விலாகாவின் ஒரு பகுதியில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது இதில் கடமையாற்றிய ஒப்பறேற்றர் டெலிபோன் ஒப்றேற்றராக இவ்விலாகாவில் நியமிக்கப்பட்டுள்ளார். இதனுல் விவசாயப் படக்காட்சியை ஒழுங்கு செய்யச் செல்பவர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


# மெய்கண்டான்

1. திருக்குறட் கலண்டர் No 1 ஸ்பெஷல் 2-40
2. திருக்குறட் கலண்டர் No 1 (சிவப்பு) 2-25
3. ஆபில் கலண்டர்(தேதிபிளக் 5''x 7 1/4'' அளவுள்ளது) 5-00
4. நன்மொழிக் கலண்டர் No. 2 1-35
5. மாதக் கலண்டர் (பஞ்சாங்கக்கலண்டர்) -85
6, சிங்களக் கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) 2-15
7. ரேபின் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) 5-50
8. தகரப்படம் (அழகிய பல மாதிரிகள்) 2-75
9. No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) 2-75
10. No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, 2-20
11. No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, 3-60
12. No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, 2-20
13. No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, 1-75
14. No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1 நாள்) 3-85
15. No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2 நாள்) 3-30
16. No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) 3-55
17. ஜெம் பிளாஸ்ரிக் டயறி 1-85
18. புரொபெஷனல் பாக்கெட் டயறி (Appointments) 3-30
19. No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி (பேர்ஸ் சகிதம் With Purse) 3-15
20. No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் 'B' டயறி (பக்கம் 2 நாள்) 4-40
21, ஜெம் பேர்ஸ் டயறி 2-75
22. வலற் டயறி (Wallet Diary மிகச்சிறந்தது) 6-50
23. பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி 5-50
24. பிளாஸ்ரிக் சிங்கள பாக்கெட் டயறி 2-20
25. சிங்கள பஞ்சாங்க 'A' (Plastic) 3-85
26. ,, ,, 'B' டயறி ,, 3-30
27. புரொபெஷனல் பிளாஸ்ரிக் Appt. டயறி 7 1/4''X9 3/4'' 7-00
28. புரொபெஷனல் பாக்கெட் பேர்ஸ் டயறி 4-15

இன்னும் பல உண்டு. மற்றும் விபரங்களுக்கு:

மெய்கண்டான்
அச்சியந்திரசாலை லிமிட்.,
161, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
போன்: 79141.

கிளை: 10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
போன்; 236.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரூ.10,000 கள்ளக்கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டன

மாவிட்டபுரம், ஞாயிறு
வல்வெட்டித்துறை சுங்கப்பகுதியினர் நேற்று முன்தினமிரவு வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வைத்து சுமார் 10,000 ரூபாய் பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்களைக் கைப்பற்றியுள்ளார்கள். இப்பொருட்களை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சட்டவிரோதமாக கடத்த கள்ளக்கடத்தல்காரர் முயலுகையிலேயே இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

வல்வெட்டித்துறைசுங்கப் பகுதி சப்கலக்டர் திரு. கே. விக்னேஸ்வரராஜாவுக்குக் கிடைத்த ஓர் இரகசியத் தகவலைத் தொடர்ந்து அவர் தலைமையில் சென்ற சுங்கப் பகுதியினர் வல்வெட்டித்துறைக் கடற்கரையில் ஒரு கோஷ்டியினர் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருப்பதாகவும் அந்தநேரத்தில் தலையில் சுமந்துகொண்டு கட்டுமரத்தில் ஏற்றக் கொண்டு வந்த கள்ளக்கடத்தல் பொருட்களைக் கரையில்போட்டு விட்டு கடத்தல்காரர்கள் ஓடிவிட்டார்கள் எனவும் கடலில் அரைவாசி ஏற்றிய பொருட்களுடன்நின்ற இயந்திரப்படகும் விரைந்து செல்லத் தொடங்கியதைத் தொடர்ந்து உடனே உதவி கலக்டர் திரு விக்னேஸ்வரராஜா ஜீப்பில் காரைநகர் கடற்படைத் தளத்திற்குச் சென்று அங்கிருந்து லெப்டினண்ட் ஜெயநிதி தலைமையில் ஒருகடற்படை லோஞ்சில் விரைந்து ஆழ்கடலுக்குச்சென்று தேடியபோது கள்ளக்கடத்தல் படகை காணமுடியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கரையில் காணப்பட்ட பொருள்களில் வின்சிலர் டோர்ச்லைட்டுகளும் நைலோன் நூல் கட்டைகளுமே காணப்பட்டதாக அறியப்படுகிறது. இவற்றின் பெறுமதி சுமார் 10,000 ரூபாய் என மதிக்கப்பட்டுள்ளது. இக்கள்ளக் கடத்தல் பொருட்கள் சம்பந்தமாக விசாரணை நடத்திய வடபகுதி உதவிச் சுங்கக் கலக்டர் திரு. கே. கந்தசாமி இப்பொருட்களைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டுள்ளார்.

# மயங்கிவிழுந்த சிறுமி மரணமானர்

## யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் சம்பவம்

திருநெல்வேலி, திங்கள்
யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு அருகாமையில் திடீரென மயங்கி விழுந்த பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக மரணமான சம்பவமொன்று நேற்று மாலை நடந்தது. இவர் மரணமாவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னர் இவருக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஊசி போடப்பட்டதாக அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பிரப்பங்குளத்தைச் சேர்ந்த சரோஜா மகாலிங்கம் என்ற சிறுமி காலில் ஏற்பட்ட புண் ஒன்றுக்கு மருந்து கட்டுவதற்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாராம். வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தில் ஊசியைப் போட்டுக்கொண்டு வீட்டிற்குச் செல்லும்போது யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் இச்சிறுமி மயக்கமுற்று விழுந்ததாகவும், காரொன்றில் அவரை மீண்டும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றபோது அவர் இறந்துவிட்டதாகவும் தெரிகின்றது. இவரது மரணம் சம்பந்தமான விசாரணை நடைபெறுகின்றது.

# கிரிக்கெட்டெஸ்ட்

## இலங்கை 5:120

கராச்சி, நவ. 27
இன்று நடைபெற்ற இலங்கை— பாகிஸ்தான் கிரிக்கட்போட்டியில் ஆட்ட முடிவில் இலங்கை 5 விக்கட்டுகளை இழந்து 120 ரன்கள் எடுத்திருந்தது. பாகிஸ்தான் சகல விக்கட்டுகளையும் இழந்து 483 ரன்கள் எடுத்திருந்தது.

மூன்றுவது 'டெஸ்ட்' போட்டியின் மூன்றுவது நாளான இன்று இலங்கை 2வது இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்தது. முதல் இன்னிங்ஸில் இலங்கை சகல விக்கட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

# கண்ணுடி ஜன்னலை கையால் அடித்தாராம்

திருநெல்வேலி, திங்கள்
கண்ணுடி ஜன்னலொன்றைக் கையால் உடைத்த நபரொருவர் கையில் பலத்தகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மயிலிட்டியைச் சேர்ந்த மேற்படி நபர் அங்குள்ள பெற்றோல் நிலையம் ஒன்றுக்குச் சென்று அங்கிருந்த கண்ணுடி ஜன்னலொன்றைக் கையால் உடைத்ததாகவும், அப்போது சிதறிய கண்ணுடித் துண்டுகள் அவரது கைகளுக்குள் ஏறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாய் கடித்தவர் மரணமானர்

திருநெல்வேலி, திங்கள்
இலமாதங்களுக்குமுன்னர் குட்டி நாயொன்றினால் கடிக்கப்பட்டு வாய்பேச முடியாதநிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கரணவாயைச் சேர்ந்த ஆர். கைலாசபிள்ளை என்ற இளைஞர் நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானர். இவரது மரணம் சம்பந்தமாக திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. சேனாதிராஜா மரணவிசாரணை நடத்தினர்.

# நடிகை போஸ் கொடுத்தார்; மகன் மீது சிங்கம் தாவியது

நியூயோர்க், நவ. 27
பிரபல ஹொலிவூட் நடிகை ஜேன்ஸ் மான்ஸ்பீல்ட் இங்குள்ள மிருகக்காட்சிசாலையொன்றில் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு 'போஸ்' கொடுத்துக் கொண்டிருக்கையில் அவருடன் கூடச்சென்றிருந்த அவரது 6 வயது மகன் மீது சிங்கமொன்று பாய்ந்து தாக்கியதால்சிறுவன் பலத்த காயங்களுக்குள்ளாகி உடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

## கூதல் காய்ந்தவர் காயமுற்றார்

திருநெல்வேலி, திங்கள்
கூதல் காய்வதற்காக எரிக்கப்பட்ட நெருப்பினால் எரிந்துபலத்த காயங்களுக்குள்ளான வயது முதிர்ந்தபெண்ணுருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அரியாலையைச் சேர்ந்த வள்ளியம்மை என்ற இப்பெண் குளிர் காய்வதற்காக நெருப்பை மூட்டி அதன் அருகிலிருந்ததாகவும்' அப்போது அவரின் சேலையில் பற்றிய நெருப்பு அவரின் உடலிலும் பற்றியதாகவும் இதனைக் கண்ட அவரது மகனே அவரை உடனே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடகுவைப்பதிலும் சங்கடம்

கொள்ளாந்தை, ஞாயிறு
தோட்டத் தொழிலாளர்கள் நகைகளை வங்கிகளில் அடகுவைக்கப் போகும்போதுஅவர்களிடம் பங்கீட்டுப் புத்தகம், ரேஷன் கார்ட்டு போன்றவற்றைக் கேட்பதால் அவர்கள் பல இன்னல்களுக்குள்ளாவதாகத் தெரிகிறது.

இதுவற்றுமுறைப்பாடுதெரிந்து மக்கள்வங்கிஜெனரல்மனேஜருக்கு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு. வி. பி. கணேசன் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## தமிழ் நாடக துறையின் குறை

திருநெல்வேலி, ஞாயிறு
''மேல்நாடுகளில்பல சிறந்த எழுத்தாளர்கள் சர்வகலாசாலைகளில் நாடகத்துறையில் பயிற்சிபெற்றவர்களாகவும் அக்கலாசாலையில் நாடகத் துறைப் பேராசிரியர்களாகவும் இருந்துவருவதோடு நல்ல நாடக இலக்கண நூல்களை எழுதியும், நாடகங்களை அரங்கேற்றியும் நாடக எழுத்தாளர்கட்கு வழிகாட்டியாகவும் இருந்து வருகின்றனர்கள். ஆனல் தமிழிலக்கியம் பலதுறைகளிலும்முன்னேறியுள்ள இக்காலத்திலும்கூட நாடகத்துறையில் சிறந்த எழுத்தாளர்கள் தோன்றி நல்லதரமான நாடகங்களை நாடக உலகுக்குத் தராதிருப்பது பெருங்குறையாக விருக்கின்றது''.

இவ்வாறு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட யாழ். இசை நாடக சபாவிற்குத் தலைமை வகித்துப்பேசிய வழக்கறிஞர் திரு. சதா. ஸ்ரீநிவாசன் தனது தலைமையுரையிற் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ''வடமொழியிலும் தென்மொழியிலும் பலபண்டைய நாட்க இலக்கண நூல்கள் இருந்தாலும் தற்காலக் கொள்கைகளின்படி எழுதுவதற்கு மேல்நாட்டு இலக்கண நூல்களின் உதவியை நாடவேண்டியுள்ளது என்றூர்.

மேற்படி சங்கத்தின் போஷகர்களாக நீதியரசர் திரு. எச். டபிள்யு. தம்பையா, கவியோகி சுத்தானந்தபாரதியும், தலைவராக வழக்கறிஞர் திரு. ஸ்ரீநிவாசனும், செயலாளராக கிராமசேவையாளரான திரு கே. செல்வரத்தினமும், பொருளாளராக திரு. என். கணபதிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கட்டாக் காலி மாடுகள்

கினிதொச்சி, ஞாயிறு
கினிநொச்சியில் கட்டாக் காலி மாடுகளின் தொல்லை பெருகிய சங்கமுடிந்து இருப்பதாகத் தெரிகிறது. இரவில் வீதிகளில் வாகனங்கள், வாகனங்கள் செல்லமுடியாது கூட்டம் கூட்டமாக மாடுகள் படுத்திருக்கின்றனவாம். இந்த மாடுகள் பயிர்களை அழித்து வருவதாகவும் முறையிடப்படுகிறது.

# மக்கள் அனைவருமே பயந்துதான் வாழ்கிருர்கள்'

## திருமதி சிறிமா சொல்கிருர்

கொழும்பு, ஞாயிறு
இலங்கையிலுள்ள எல்லா மக்களுமே பயந்துகொண்டு தான் வாழ்கிருர்கள். சிங்களவர்கள் தம் மொழிக்கு ஆபத்துவருமென்றும், பௌத்தர் தம் மதத்துக்கு ஆபத்துவருமென்றும், தமிழர் தம் மொழிக்கும், மதத்துக்கும், ஆபத்துவரலாம் என்றும், கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் தங்கள் மதங்களுக்கு ஆபத்துவரும் என்றும் அஞ்சுகிருர்கள். இந்த நிலைமையில் நாட்டில் அமைதியும், ஐக்கியமும் ஏற்பட்டுவிட்டதாகப் பிரதமமந்திரி எப்படிக் கூற முடியும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா வேருவிலையில் இஸ்லாமிய முன்னணிக் கிளை ஒன்றின் ஆரம்ப விழாவில் பேசுகையில் கூறினர்.

திருமதி பண்டாரநாயகா தொடர்ந்து பேசுகையில் நாட்டில் உண்மையான ஐக்கியம் ஏற்படவேண்டுமானுல் மக்களின் அடிப்படை உரிமைகளுக்குஉத்தரவாதம் அளிக்கப்பட்டு அவர்கள் பயமின்றி வாழவேண்டும் என்றூர்.

சென்ற தேர்தலின்போது முஸ்லிம்மக்கள் யு. என். பி யின் பொய்ப் பிரசாரத்தால் தவருனவழியில் சென்றுவிட்டார்கள் என்றும், ஆனல் இப்போது அவர்கள் தம் தவறைஉணர்ந்து விட்டதாகவும் அவர் கூறினர்.

வடக்கு கிழக்குமாகாணங்கள் தமிழரசுக்கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்றது. வடமாகாணத்துக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கு பிரதம மந்திரி தமிழரசுக் கட்சித் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பொதுக்கூட்டத்தி ..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாட்டின் அபிவிருத்திக்காக நாட்டின் நலனுக்காக ஒன்றுபட்டு உழைக்க முன்வருவோம்'' என்று திரு. இரியகொல்ல அந்தக் கூட்டத்தில் அழைப்பு விடுத்தார்.

நித்தம்புவ பௌத்த வித்தியாலயத்தில் நடைபெற்ற பூஜை அறைத் திறப்பு விழாவின் பின் நிகழ்ந்தபொதுக்கூட்டத்தில்திரு. இரியகொல்ல பேசுகையில், ''தலைவர்களுக்கிடையிலுள்ள வேற்றுமை நாட்டின் வேற்றுமைக்கு வழிவகுத்து நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக உருவாகியுள்ளது'' என்றூர். காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகா மீதும் திருமதி பண்டாரநாயகா மீதும் தாம் அளவுகடந்த மதிப்பு வைத்திருப்பதாக கூறிய திரு. இரியகொல்ல, நாங்களும் திருமதிபண்டாரநாயகாவின்கட்சியும் எங்கள் மக்களின் நலனைபேகொண்டு ஒற்றுமையாக உழைத்தால் எங்கள்மக்களுக்கு சிறப்பான வாழ்வுஇருக்கும்'' என்றூர்.

## ராஜதந்திரக் கார்

## வவனியாவில் தடுக்கப்படவில்லை

வவனியா, ஞாயிறு
வவனியா பொலிஸ்நிலையத்தில் வெளிநாட்டுதூதுவராலயத்திற்கு சொந்தமான கார் ஓர் நண்பரை ஏற்றிச் செல்வதற்காகவே நிறுத்தப்பட்டதென்றும் இக்காரை நிறுத்திவைக்கும்படி வவனியா பொலிஸ்நிலையத்திற்கு வேரூேர் பொலிஸ் நிலையத்திலுள் அறிவித்தல் கொடுக்கப்பட்டதென்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக்காரில் சென்றவர்கள் ஏற்கனவே இவர்களுடன் காரில் பிரயாணம் செய்ய திட்டமிட்டிருந்ததாகவும் காரை தவறவிட்டபடியால் பொலிசாரின் உதவியுடன் இக்காரை வவனியாவில் நிறுத்தி அவர்களுடன் பிரயாணம் செய்தார்களென்றும் தெரியவருகிறது.

## விக்னேஸ்வரா மாணவிக்கு முதலிடம்

சுழிபுரம், ஞாயிறு
கொழும்பு விவேகானந்த சபையினர் யாழ்ப்பாணத்தில் நடாத்திய சமயப் பேச்சுப் போட்டியில் மேற்பிரிவில் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலையைச் சேர்ந்த செல்வி இ. ஈஸ்வரி முதல் இருவரில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## வங்கிஊழியர் கோரிக்கை

திருநெல்வேலி, திங்.
யாழ்ப்பாண மாகாண வங்கியில் கடமையாற்றும் ஊழியர்களில் வீடில்லாதவர்களுக்கு ரூபா இருபதினுயிரத்தைக் கடனுகக் கொடுக்கவேண்டுமென்றும், இத்தொகையை அவர்களது மாதாந்த வேதனத்திலிருந்து இருபது வருடகால எல்லைக்குள் கழிக்கவேண்டும் என்றும் மேற்படி வங்கியைக் கேட்டுக்கொள்வதென்ற தீர்மானம் யாழ்ப்பாணம்கூட்டுமாகாணவங்கி ஊழியர்கள் வீடமைப்புச் சங்கத்தின் வருடாந்தக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## மரண அறிவித்தல்

கைதடியைச் சேர்ந்த முன்னுள் மலாயன் பென்சனியர் திரு. திவாகரராசா சின்னத்தம்பி காலமானுர். அன்னுர் திருமதி. நேசம்மா, சிங்கப்பூரைச்சேர்ந்த தேவராஜன், இளைப்பாறிய பொலிஸ் தர்மராஜன், குளியாப்பிட்டி பொலிஸ் காரியாலயத்தைச் சேர்ந்த ஜெயராஜா, ஆகியோரின் தந்தையும், வல்வெட்டித்துறை பட்டினசபையைச் சேர்ந்த திரு. பாஸ்கரின் மாமனுருமாவார். அன்னுரின் பூதவுடல் திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு 'அருணுேதய' இல்லத்திலிருந்து கைதடி மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1181